# தமிழ் சொல்

# TAMIL SOUL


| Volume : 1 | Issue : 1 | April 2024 | Chennai | Pages : 8 | Price : 8.00 | (Tamil Monthly) |
|---|---|---|---|---|---|---|
| மலர் : 1 | இதழ் : 1 | ஏப்ரல் 2024 | சென்னை | பக்கம் : 8 | விலை : ரூ.8.00 | (தமிழ் மாத இதழ்) |


# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை வெளியீடு

## ஏழைப் பெண்களுக்கு ரூ.1 லட்சம் நிதியுதவி, மாநிலங்களின் விருப்பப்படி நீட் உள்ளிட்ட செயல்திட்டங்கள் இடம் பெற்றுள்ளன!




காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஏழை பெண்களுக்கு ஆண்டுக்கு ரூ.1 லட்சம் நிதியுதவி வழங்கப்படும். மாநிலங்களின் விருப்பப்படி நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளை நடத்திக் கொள்ளலாம் என்பது உள்ளிட்ட செயல் திட்டங்கள் அதில் இடம் பெற்றுள்ளன.

மக்களவை தேர்தலையொட்டி, இண்டியா கூட்டணியின் பிரதான கட்சியான காங்கிரஸின் 48 பக்க தேர்தல் அறிக்கை டெல்லியில் ஏப்ரல் 5 அன்று வெளியிடப்பட்டது. கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி, தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு தலைவரான முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் ஆகியோர் வெளியிட்டனர்.

இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்களுக்கான நீதி, சமூக நீதி ஆகிய 5 முக்கிய அம்சங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தேர்தல் அறிக்கை'நியாய பத்திரம்' என்ற தலைப்பில்வெளியிடப்பட்டது. அதன் முக்கிய அம்சங்கள்:

தேசிய அளவில் சாதிவாரி, சமூக— பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்படும். ஓபிசி, எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கான 50 சதவீத இடஒதுக்கீடு வரம்பை உயர்த்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும். பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான(இடபிள்யூஎஸ்) 10% இடஒதுக்கீடு அனைத்து சாதி, சமூகத்தினருக்கும் விரிவுபடுத்தப்படும். ஓபிசி, எஸ்சி, எஸ்டி பிரிவு அரசு பணியிடங்கள் ஓராண்டுக்குள் நிரப்பப்படும்.

8—வது அட்டவணையில் புதிய மொழிகளை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய சமூக உதவிதிட்டத்தின்கீழ் மூத்த குடிமக்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான மாத உதவித் தொகை ரூ.1,000 ஆக உயர்த்தப்படும். ரூ.25 லட்சம் வரை, பணம் செலுத்தாமல் சிகிச்சை பெறும் மருத்துவ காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும்.

மத்திய அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள 30 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும். மாநிலஅரசுகளுடன் கலந்துபேசி, புதிய கல்வி கொள்கையில் திருத்தம் செய்யப்படும். எஸ்சி, எஸ்டி, ஓபிசி, இடபிள்யூஎஸ், சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு பிணையின்றி ரூ.7.5 லட்சம் வரை கல்விக் கடன் வழங்கப்படும். 2024 மார்ச் 15வரை வழங்கப்பட்ட கல்விக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். 9—ம்வகுப்பு முதல் 12—ம் வகுப்பு வரைமாணவர்களுக்கு செல்போன்கள் வழங்கப்படும்.

மாநிலங்களின் விருப்பப்படி நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளை நடத்திக் கொள்ளலாம்.

நாடு முழுவதும் 'மகாலட்சுமி திட்டம்' அமல்படுத்தப்படும். இதன்படி ஏழை குடும்பங்களை சேர்ந்த பெண்களுக்கு ஆண்டுக்கு ரூ.1 லட்சம் நிதியுதவி வழங்கப்படும். 2025முதல் மத்திய அரசு பணிகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும்.

எம்.எஸ்.சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரைத்த குறைந்தபட்ச ஆதரவுவிலையை உறுதி செய்து புதிய சட்டம் இயற்றப்படும். மீனவர்களுக்கான டீசல் மானிய உதவி திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும். மீனவர்கள் தொடர்பாக அண்டை நாடுகளுடன் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண செயல்திட்டம் வகுக்கப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலை உறுதி திட்டத்தில் ஒரு நாள்ஊதியம் ரூ.400 ஆக உயர்த்தப்படும். தொழிலாளர்கள், மக்களுக்குகுறைந்த விலையில் உணவு வழங்கமாநில அரசுகளுடன் இணைந்து 'இந்திரா கேன்டீன்கள்' தொடங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

புதிய ஜிஎஸ்டி அமல்படுத்தப்படும் — 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' கிடையாது: பண மதிப்பு நீக்கம், ரஃபேல் ஒப்பந்தம், பெகாசஸ் சாப்ட்வேர், தேர்தல் பத்திரங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும். கடந்த 10 ஆண்டுகளில் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்ற குற்றவாளிகள் மீண்டும் கொண்டு வரப்பட்டு சட்டத்தின் முன்பு நிறுத்தப்படுவார்கள். பாஜகவில் இணைந்த ஊழல்வாதிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி உள்ளனர். அவர்கள் மீதான வழக்குகள் விசாரிக்கப்படும். முப்படைகளிலும் அக்னி பாதை திட்டம் ரத்து செய்யப்பட்டு, பழைய நடைமுறைப்படி வீரர்கள் சேர்க்கப்படுவார்கள்.

தற்போதைய ஜிஎஸ்டி சட்டங்கள் மாற்றப் படும். சர்வதேச அளவில் ஏற்கப்பட்ட கொள்கை களின்படி புதிய ஜிஎஸ்டி வரிமுறை அமல்படுத்தப்படும். இதன்மூலம் ஏழைகள் மீதான ஜிஎஸ்டி வரிச் சுமை நீக்கப்படும். வரி வருவாயில் மாநிலங்களுக்கு உரிய பங்கு வழங்கப்படும்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம் நிராகரிக்கப்படும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் வாக்குப் பதிவு எண்ணிக்கை, விவிபாட் ஒப்புகை சீட் டுகளுடன் சரிபார்க்கப்படும். தேர்தல் ஆணையம், மத்திய தகவல் ஆணையம், மனித உரிமைகள் ஆணையம், சிஏஜி, எஸ்சி, எஸ்சி, சிறுபான்மை யினர், ஓபிசி உள்ளிட்ட ஆணையங்களின் சுதந்திரம் வலுப்படுத்தப்படும். கட்சி மாறும் எம்எல்ஏ, எம்.பி.க்களை உடனடியாக தகுதி யிழக்க செய்யும் வகையில் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்.

சட்டத்தின் அடிப்படையில் காவல், புலனாய்வு அமைப்புகள் செயல்படுவது உறுதி செய்யப்படும். ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும். ஊடகத் துறையில் ஏதேச்சதிகாரத்தை தடுக்க சட்டம் இயற்றப்படும். உணவு, உடை, திருமணம் உள்ளிட்ட விவகாரங்களில் அவரவர் தனிப்பட்ட உரிமை பாதுகாக்கப்படும்.

உச்ச நீதிமன்றத்துடன் ஆலோசித்து தேசிய நீதித் துறை ஆணையம் அமைக்கப்படும். இது உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிக்கும் என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 10 ஆண்டு பாஜக ஆட்சியில் வழங்கியது சூப் தான்! இனிதான் பிரம்மாண்ட விருந்து இருக்கிறது - பிரதமர் நரேந்திர மோடி



"பத்து ஆண்டு பாஜக ஆட்சி என்பது உணவுக்கு முன்பு வழங்கப்படும் 'சூப்' போன்றது. இனிதான்பிரம்மாண்ட விருந்து காத்திருக்கிறது" என்று ராஜஸ்தான் மாநிலம் சுரு நகரில் நடந்த தேர்தல் பேரணியில் பிரதமர் மோடி பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

பெரிய உணவகங்களுக்கு சென்றால் முதலில் பசியை தூண்ட சிலவகை உணவுகளை பரிமாறுகிறார்கள். அப்படித்தான் கடந்த 10 ஆண்டுகளாக மோடி உங்களுக்கு சாப்பாட்டுக்கு முன்பு அருந்தும் சூப் தந்திருக்கிறேன். இனிமேல் தான் பிரம்மாண்ட விருந்து காத்திருக்கிறது. நாட்டை நாம் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

கடந்த 2019—ம் ஆண்டு பிப்ரவரி 26—ம் தேதி நான் சுரு நகருக்கு வந்த போது பாலகோட் விமான தாக்குதலில் இந்திய விமான படை ஈடுபட்டிருந்தது. அப்போது பயங்கரவாதிகளுக்கு நாம் வலுவான பாடம் கற்பித்தோம். பாரத மாதா தலைகுனிய நான் ஒருபோதும் விடமாட்டேன் என்று அப்போது சூளுரைத்தேன். அதன்படியே நாம் செய்து காட்டியதால் நமது எதிரிகளுக்குக் கூட இப்போது தெரியும், பிறந்திருப்பது புதிய இந்தியா என்பது. ஆகையால் அவர்களது எல்லைக்குள் புகுந்துதாக்கக் கூட நாம் தயங்க மாட்டோம் என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

நமது விமான படை வீரர்கள்அன்று தாக்குதலில் இறங்கிய போது, காங்கிரஸும் அதன் அகங்காரம் பிடித்த கூட்டணியினரும் அந்த தாக்குதலுக்கு ஆதாரம் கேட்டனர். தேசத்தை பிளவுபடுத்தி நமது ராணுவத்தை அவமதிப்பதுதான் காங்கிரஸ் கட்சியின் அடையாளம். டெல்லி ராம்லீலா மைதானத் தில் இண்டியா கூட் டணி தலைவர்கள் மக்களவை தேர்தல் பிரச்சாரம் செய்யவில்லை. தங்களது ஊழல் அம்பலமாகிவிட்டதே என்ற பதைபதைப்பில் கூடிய கூட்டம் அது. காங்கிரஸும் இண்டியா கூட்டணியும் சுயநலத்துக்காகக் கூடிய கூட்டமே அன்றி ஏழை, பட்டியலின, நலிவடைந்த மக்களின் நலனுக்கான கூட்டணி அல்ல.

'மோடி கி கியாரண்டி' நிறைவேற்றப்பட்டதற்கு ராஜஸ்தான் சரியான உதாரணம். உஜ்வாலா யோஜனா திட்டத்தின்கீழ் கேஸ் சிலிண்டர்களின் விலை குறைக்கப்படும் என்று நான் அளித்த உத்தரவாதத்தைக் காப்பாற்றினேன்.

காங்கிரஸின் தேர்வு முறைகேட்டை எதிர்த்து தீவிர விசா ரணை மேற் கொள்ளப்படும் என்று இளை ஞர்களுக்கு நான் அளித்த வாக்குறுதியும் நிறைவேற்றப்பட்டு விட்டது.

ராமர் கோயில் விவகாரத்தில்வாய் திறவாமல் அமைதி காக்கும்படி காங்கிரஸ் தனது கட்சியினருக்கு அறிவுறுத்திவிட்டது. ஏனெனில் ராமரின் பெயரை உச்சரித்தாலே அழிந்துவிடுவோம் என்று காங்கிரஸ் அஞ்சுகிறது. இவ்வாறு பிரதமர் பேசினார்.




**நீலகிரி மாவட்டம் உதகை மத்திய பேருந்து நிலையத்தில் 'என் வாக்கு என் உரிமை' என்ற தலைப்பில் அமைக்கப்பட்டுள்ள செல்பி பாயிண்டில், வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கலெக்டர் மு.அருணா புகைப்படம் எடுத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் உள்ளார்.**



**திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் குமரன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இருப்பறையை ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி கமிஷனர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் உள்ளார்.**

# கெஜ்ரிவாலின் ஐபோனிலிருந்து தகவல்களை எடுத்துத் தர அமலாக்கத் துறைக்கு ஆப்பிள் நிறுவனம் மறுப்பு!







டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலின் ஐபோனிலிருந்து தகவல்களை எடுத்துத் தர அமலாக்கத் துறைக்கு ஆப்பிள் நிறுவனம் மறுப்பு

டெல்லி மதுபானக் கொள்கை ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மாநில முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலின் ஐபோனிலிருந்து தகவல்களை எடுத்துத் தருவதற்கு ஆப்பிள் நிறுவனம் மறுப்பு தெரிவித்துள்ளது.

டெல்லியில் மதுபான கொள்கை ஊழல் வழக்கில் கைதாகியுள்ள அம்மாநில முதல்வரும், ஆம் ஆத்மி கட்சி தேசிய ஒருங்கிணைப்பாளருமான அர்விந்த் கேஜ்ரிவாலுக்கு அமலாக்கத்துறை காவல் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட கேஜ்ரிவாலை வரும் 14—ம் தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

முன்னதாக மதுபான கொள்கை ஊழல் விவகாரத்தில் ஆம் ஆத்மி கட்சிக்கு ஹவாலா பணம் கிடைத்ததாகவும், அதனை அவர்கள் கோவா சட்டப்பேரவை தேர்தலுக்கு பயன்படுத்தியதாகவும் நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை குற்றம் சாட்டியிருந்தது.

மேலும், இதற்கான ஆதாரம் இருக்கிறது. ஆனால் கெஜ்ரிவால் ஆப்பிள் ஐபோன் மற்றும் ஆப்பிள் மடிக்கணினியின் கடவுச்சொல்லை (பாஸ்வேர்ட்) கூறவில்லை. இதனால் எங்களால் டிஜிட்டல் ஆவணங்களை கைப்பற்ற முடியவில்லை என்றும் நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் கெஜ்ரிவாலின் ஐபோன் மற்றும் லேப்டாப்பை ஹேக் செய்து தகவல்களை எடுக்க உள்ளதாக நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை கூறியிருந்தது.

இதைத் தொடர்ந்து ஐபோன், லேப்டாப்பிலிருந்து தகவல்களை எடுத்துத் தருமாறு ஆப்பிள் நிறுவனத்திடம் அமலாக்கத்துறை உதவி கோரியதாக கூறப்படுகிறது. அப்போது ஆப்பிள் நிறுவனம், ஐபோன் உரிமையாளர் நினைத்தால் மட்டுமே இதனை திறக்க முடியும் என்றும் தங்களால் முடியாது என்றும் கை விரித்து விட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கெனவே சில உலகத் தலைவர்களின் ஐபோன்களில் இருந்து தகவல்களை எடுத்துத் தருமாறு கேட்டபோது ஆப்பிள் நிறுவனம் கை விரித்திருந்தது.

சவுதி விமானப் படையின் 2—வது லெப்டினன்டான சயீத் அல்ஷாம்ரனியின் செல்போனிலிருந்து தகவல்களை எடுத்துத் தருமாறு ஆப்பிள் நிறுவனத்திடம் அமெரிக்க எஃப்பிஐ கேட்டது. 2020—ல் மூன்று அமெரிக்கர்களை சயீத் கொன்ற விவகாரத்தில் விசாரணை நடத்தியபோது இந்தத் தகவலை அமெரிக்கா கேட்டது. ஆனால் ஆப்பிள் நிறுவனம் அதற்கு மறுப்பு தெரிவித்தது.

# பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கும் பரவ வாய்ப்பு பெருந்தொற்று ஏற்படும் என நிபுணர்கள் எச்சரிக்கை!

பறவைக் காய்ச்சல் மனிதர்களுக்கும் பரவ வாய்ப்பு: கரோனா போன்ற பெருந்தொற்று ஏற்படும் என நிபுணர்கள் எச்சரிக்கை



பறவைக் காய்ச்சல் தொற்று மனிதர்களுக்கும் பரவ வாய்ப்பிருப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும் கரோனா போன்ற பெருந்தொற்று உலகில் ஏற்படவும் அதிக வாய்ப்புள்ளதாக அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் அண்டார்டிக் பகுதியில் ஏராளமான பெங்குயின்கள் உயிரிழந்து கிடந்தன. இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த பண்ணைத் தொழிலாளி ஒருவர் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. அவருக்கு எச்பிஏஐ ஏ (எச்5என்1) வகை வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இதைத்தான் மருத்துவ நிபுணர்கள் பறவைக் காய்ச்சல் தொற்று என்று தெரிவிக்கின்றனர்.

இந்த வகை பறவைக் காய்ச்சல், பால் தரும் பசுக்கள் மூலம் மனிதர்களுக்கும் பரவ வாய்ப்பிருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

2020—ம் ஆண்டு முதல் பறவைக் காய்ச்சல், எச்5என்1 (H5N1) என்ற நோய்க்கிருமி வகை, உலகம் முழுவதும் பரவி வருகிறது. இவை பறவைகள் மற்றும் வன விலங்குகளுக்கு பரவி கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. இந்த வைரஸ் 80—க்கும் மேற்பட்ட நாடுகளில் (டிசம்பர் 2023 நிலவரப்படி) பறவைகளை பாதித்துள்ளது. மேலும் இந்த வைரஸால் கோழிப் பண்ணைகளில் லட்சக் கணக்கான கோழிகள், வான்கோழிகளும் உயிரிழந்தன.

பல வகையான காட்டுப் பறவைகள் மற்றும் கடற்பறவைகள் ஆயிரக்கணக்கில் உயிரிழந்தன. அண்மையில் அண்டார்டிகா பகுதியில் பெங்குயின்கள், அர்ஜெண்டினாவில் யானை கடற்பசுக்கள் என அழைக்கப்படும் சீல்கள் உயிரிழந்தன.

இந்த வகை எச்5 என்1 வகை பறவைக் காய்ச்சல் மிகக் கொடியது என்றும், எளிதில் மனிதர்களுக்கு பரவ வாய்ப்புள்ளது என்றும் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். மேலும் இது கரோனா போன்ற பெருந்தொற்று நோயாகவும் மாற வாய்ப்புள்ளதாக சுகாதாரத்துறை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

டெக்சாஸ் மாகாணத்தில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபருக்கு, தனிமையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் உள்ள பசுக்களுக்கு இந்த பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

2022—ல் முதன் முதலாக அமெரிக்காவின் கொலராடோவில் ஒரு நபருக்கு பறவைக் காய்ச்சல் ஏற்பட்டது. அதன் பின்பு தற்போதுதான் டெக்சாஸில் உள்ள இந்த நபருக்கு பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பிட்ஸ்பர்க்கை சேர்ந்த பறவைக் காய்ச்சல் ஆராய்ச்சியாளர் டாக்டர் சுரேஷ் குச்சிப்புடி கூறும்போது, “இந்த பறவைக் காய்ச்சல் மனிதர்களை நெருங்கி வருகிறது. இந்த வைரஸ் மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் பரவும். இது ஒரு பெருந்தொற்று நோயாக மாற வாய்ப்புள்ளது. இது புதிதாக உருவாகி வரும் வைரஸ் அல்ல. இது ஏற்கெனவே உலகம் முழுவதும் உள்ளது’’ என்றார்.

இது குறித்து பயோநயாகரா மருந்து தயாரிப்புத் துறை ஆலோசகர் ஜான் ஃபுல்டன் கூறும்போது, “இந்த பறவைக் காய்ச்சல் கரோனா பெருந்தொற்றை விட 100 மடங்கு ஆபத்தானதாகவும், மோசமானதாகவும் இருக்கும். இந்த வைரஸ் உருமாற்றம் பெற்று பலரது உயிர்களை பலி வாங்கும்” என்றார்.



நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் உமா தலைமையில், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் கணினி மூலம் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் ஒப்படைக்கும் பணி அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.



திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான கிறிஸ்துராஜ் 18.3.2024 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள கட்டுப்பாட்டு அறையில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024 தொடர்பாக தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினரின் சோதனைகள் குறித்து ஜி.பி.எஸ். கேமரா மூலம் கண்காணிக்கப்படுவதை ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகரக் காவல் ஆணையாளர் பிரவீன்குமார் அபிநபு, மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார், கிரியப்பனவர், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன் மற்றும் தொடர்புடைய அலவலர்கள் உள்ளனர்.



கரூர் கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரும் கலெக்டருமான தங்கவேல் முன்னிலையில் மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பணி ஒதுக்கீடு கணினி முறையில் குலுக்கல் நடைபெற்றது.



கோவை ரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 5000த்திற்கும் மேற்பட்ட முதல் வாக்காளர்களாகிய மாணவர்கள் 100% வாக்களிப்பதன் அவசியத்தினை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் கிராந்திகுமார் பாடி தலைமையில் வாக்காளர் உறுதி மொழியினை எடுத்துக் கொண்டனர். அருகில் மகளிர் திட்ட அலுவலர் சந்திரா, ரத்தினம் கல்விக்குழுமங்களின் செயல் அலுவலர் மாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.

# உலகமே பாராட்டும் தேர்தல் கட்டுமானம்!

ஒருகாலத்தில் இந்தியர்களுக்கு அரசாளவே தெரியாது என்றே மேற்கத்திய நாடுகள் கருதிக் கொண்டிருந்தன. அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்துத் தருவதாகக்கூடக் கூறின. இந்தியாவின் தலைவர்கள் அதை ஏற்கவில்லை. இந்தியாவின் அரசியல் நிர்ணயசபை சட்டத்தை சுயமாக நமது தலைவர்களே இயற்றி மக்களாட்சியை மாண்புடன் நடத்தினார்கள்.

16 ஆண்டுகள் இந்தியப் பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் நேருவின் மறைவுக்குப் பிறகு இந்தியாவின் எதிர்காலம் என்னவாகுமோ என்று கருதிய நிலையில், நான்காவது பொதுத் தேர்தல் முடிந்த பின், ‘லண்டன் டைம்ஸ்’ பத்திரிகையின் டெல்லி நிருபர், “இந்தியாவைச் சுதந்திரச் சட்டகத்துக்குள் வளர்த்தெடுக்கும் முயற்சிகள் தோற்றுவிட்டன.

நடந்து முடிந்த நான்காவது பொதுத் தேர்தல்தான் சுதந்திர இந்திய ஜனநாயகப் பேரரசின் கடைசிப் பொதுத்தேர்தலாக இருக்கும்” என்று எழுதினார்.

மேற்கத்திய அறிஞர்களின் எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி 17 பொதுத்தேர்தல் களை வெற்றிகரமாக நடத்தி முடித்து, உலகக் கணிப்புகளையெல்லாம் இந்திய வாக்காளர்கள் தகர்த்துவிட்டனர்.

அதிக நாட்கள் எடுத்துக்கொண்ட தேர்தலாக முதல் பொதுத் தேர்தல் அமைந்தது. முதல் தேர்தலுக்கு ஏறத்தாழ நான்கு மாத காலம் ஆனதென் றால் 1980இல் நடைபெற்ற ஏழாவது தேர்தலை நடத்திட இந்தியா எடுத்துக்கொண்டது நான்கு நாள்கள் மட்டுமே. அதன்பின் 10ஆவது தேர்தல் முதல், கடந்த 17 ஆவது தேர்தல் (2019) வரை வாக்குப்பதிவுக்கு மட்டுமே இந்தியா எடுத்துக் கொண்ட காலம் மூன்று முதல் ஆறு வாரங்கள்.

இத்தகைய சூழலில், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்த முறை ஏழு கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்படுவது குறித்து விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. எல்லாவற்றையும் கடந்து, இந்தியாவின் எதிர்காலத்தைக் கட்டமைக்கவிருக்கும் இந்தப் பொதுத் தேர்தல், இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக நாடுகளிலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது!

18 வயது வந்தவர்களும் பல லட்சம் புது வாக்காளர்களும் முதல் முறை வாக்குச் சாவடிக்கு வந்து தங்களது வாக்கை பதிவு செய்ய வரும்போது கடமை உணர்வுடன் நாம் தேசத்தின் வளர்ச்சிக்கு உண்மையாக வித்திடுகிறோம் என்ற உணர்வுடன் வாக்களித்து மகிழ வேண்டும்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்**



நாடாளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு தருமபுரி கலெக்டர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விளம்பர திரையில் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் ஒளிபரப்பு செய்யப்பட்டதை மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் சாந்தி பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மோகன், வட்டாட்சியர் ஜெயசெல்வன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்-முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

“நாட்டு மக்கள் மேல் உண்மையான அக்கறை கொண்ட நமது இந்தியா கூட்டணி அரசு ஒன்றியத்தில் அமைந்தவுடன், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். இந்தியா கூட்டணிக்கு உங்களது ஆதரவைத் தாரீர்!” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது அறிக்கையில் உறுதியளித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைகிறதோ, அப்போதுதான் ஆசிரியர் அரசு ஊழியர்களின் வாழ்வில் நிம்மதி பிறக்கும்.

53 ஆயிரம் தொகுப்பூதிய ஆசிரியர்களை காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வந்தது; அரசு ஊழியர்கள் இறந்து போனால் கருணை அடிப்படையில் குடும்ப நல நிதி வழங்கியது; ஊதியக் குழு மாற்றத்தைப் பலமுறை கொண்டு வந்தது; அ.தி.மு.க. ஆட்சியில் முடக்கி விட்டுப் போன அகவிலைப்படி உயர்வினையும் சேர்த்து 2021—இல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் ஒரே நேரத்தில் 14 விழுக்காடு வழங்கியது என நமது சாதனைகளைப் பட்டியலிடத் தொடங்கினால் நாளும் பொழுதும் சொல்லிக் கொண்டே இருக்கலாம்!

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கஜானாவைத் தூர்வாரி மாநிலத்தைக் கடும் நிதி நெருக்கடியில் விட்டுவிட்டுச் சென்றார்கள். இந்தச் சூழலிலும் இன்றைக்கு ஒன்றிய அரசுக்கு இணையான, ஒன்றிய அரசு உயர்த்துகிற அகவிலைபடி உயர்வை அப்படியே வழங்கி வருகிறது நமது அரசு.

அரசு ஊழியர்கள் இறந்து போனால் வழங்கப்பட்டு வந்த மூன்று லட்ச ரூபாய் குடும்பநல நிதியை தற்போது 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கி இருக்கிறோம். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஆசிரியர் — அரசு ஊழியர்கள் பேரமைப்பான ஜாக்டோ—ஜியோ போராடியபோது, போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகளான வழக்குகள், துறைரீதியான நடவடிக்கைகள் இவற்றையெல்லாம் ரத்து செய்து, போராடிய காலத்தைப் பணிக்காலமாகக் கருதி, தேர்தல் அறிக்கையில் சொன்னபடி ஊதியத்தை வழங்கி இருக்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஆசிரியர்கள் வைத்த கோரிக்கையான, தொடக்கக் கல்வித் துறையைத் தனியாகப் பிரித்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, தொடக்கக் கல்வித் துறையைப் பள்ளிக்கல்வித் துறையிடமிருந்து பிரித்துத் தனியாகச் செயல்பட ஆணை பிறப்பித்து இருக்கிறோம்.

பள்ளிக்கல்வித்துறை ஆணையர் பணியிடத்தை மாற்றி இயக்குநர் பணியிடத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்று பல ஆசிரியர் சங்கங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று இயக்குநர் பணியிடத்தை மீண்டும் கொண்டு வந்து வந்திருக்கிறோம். ஒளிவு மறைவற்ற பொது மாறுதல் கலந்தாய்வு; இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கைக்கணிணி வழங்கும் திட்டம் செயல்படுத்தியது, ஆசிரியர்களின் குழந்தைகளின் உயர்கல்விக்கு 10 ஆயிரம் ரூபாயாக இருந்த நிதியை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது, 50 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை மேற்கொள்வது,



“அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படும்” : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி !

கனவு ஆசிரியர் விருது வழங்கி கௌரவித்தது, அறிஞர் அண் ணா தலைமைத்துவ விருது வழங்குவது, ஒவ்வொரு பள்ளியி லும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் இருப்பதை உறுதி செய்வது, 2800 முதுகலை ஆசிரியர் களை நியமனம் செய்தது, பகுதி நேர சிறப் பாசிரியர்களுக்குக் கடுமையான நிதிநிலை நெருக்கடியையும் கடந்து 2500 ரூபாய் ஊதியத்தை உயர்த்தி வழங்கியது, மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காகப் பணிபுரியும் சிறப்பு பயிற்றுநர்களுக்கு ரூபாய் 5000 தொகுப்பூதியத்தை உயர்த்தி வழங்கியது என அடுக்கடுக்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்துள்ள அரசுதான் நமது திராவிட மாடல் அரசு.

ஆனால், இப்போது திடீரென்று அரசு ஊழியர்கள் மீது கரிசனம் வந்துள்ளது போல் தேர்தலுக்காக நாடகமாடும் பழனிசாமியின் வரலாறும் அ.தி.மு.க.வின் வரலாறும் எப்படிப்பட்டது?

ஆட்சியில் இருந்தபோது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் ஊதியம் பற்றியெல்லாம் முழுப் பக்க விளம்பரம் கொடுத்து — அசிங்கப்படுத்தி — எள்ளி நகையாடி— அவர்களை கோரிக்கைகளுக்காக அழைத்துக் கூடப் பேசாமல் புறக்கணித்து அவமதித்தவர்தான் பழனிசாமி. இப்படிப்பட்டவருக்கு ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது?

தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஊதியத்தை முதலமைச்சராக இருந்துகொண்டே மிக மோசமாகக் கிண்டலடித்து மேடையில் பேசி, அவர்களை மனவேதனைக்கு உள்ளாக்கிவிட்டு, இப்போது கபட நாடகமாடி ஏமாற்றத் துடியாய் துடிப்பது யார்? பழனிசாமிதான்!

அ.தி.முக. என்றைக்காவது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் துணையாக நின்றுள்ளதா? அ.தி.மு.க.வால் அரசு ஊழியர்கள் அனுபவித்த வேதனைகளும் ீ துன்பங்களும் வரலாறு முழுக்க நிறைந்திருக்கிறதே! அரசு ஊழியர்களுக்குத் தி.மு.க. ஆட்சி, பொற்கால ஆட்சி என்றால், அவர்களது வேதனையில் உள்ளம் மகிழும் இருண்ட ஆட்சியை நடத்தியது அ.தி.மு.க!

எஸ்மா — டெஸ்மா கொண்டு வந்து நள்ளிரவில் அரசு ஊழியர்களைக் கைது செய்ததும் — அடக்குமுறை செய்ததும்தானே அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலம்! அந்த எஸ்மா, டெஸ்மா வழக்குகளை ரத்து செய்து, அரசு ஊழியர்களின் பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றியது திமுக ஆட்சியில்தான் என்பது வரலாறு!

இந்தியாவிலேயே முதன்முதலாகப் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தியது அ.தி.மு.க. ஆட்சி. இப்படிப்பட்ட அரசு ஊழியர் விரோத ஆட்சி நடத்திவிட்டு உத்தமபுத்திரன் போல் பேச பழனிசாமிக்கு என்ன அருகதை இருக்கிறது?

ஆட்சியில் இருந்தபோது பழனிசாமிதானே அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கான அகவிலைப்படி உயர்வினை முடக்கி வைத்து விட்டுப் போனார். ஆசிரியர்கள் பெற்று வந்த உயர் கல்விக்கான ஊக்க ஊதிய முறையை ரத்து செய்து விட்டுப் போனார்? இன்று அவர் வடிக்கும் நீலிக்கண்ணீருக்குப் பின்னால் அதிகாரப் பசியும் துரோகத்தின் ருசியும்தான் இருக்கிறதே தவிரே; அரசு ஊழியர்களின் மீதான அக்கறை எள்முனையளவும் இல்லை!

பழனிசாமியும் அவரது கட்சியும், தமிழ் நாட்டை வஞ்சித்து கஜானாவைத் தூர்வாரி விட்டு சென்றபோதும், தமிழ்நாட்டை மீட்டெடுத்து நிதி நிலைமையைச் சீர்செய்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். அப்படிச் செய்யப்பட்ட திட்டங்களைத்தான் பட்டியலிட்டேன்.

மீதியுள்ள கோரிக்கைகளுக்காக அரசு ஊழியர்கள் — ஆசிரியர்களை ஒவ்வொரு முறையும் அமைச்சர்கள் அழைத்துப் பேசுவதும் ஏன், நானே அழைத்துப் பேசி தீர்வு காண்பதும் — தீர்வு காணப்படும் என உறுதியளிப்பதும் என அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறோம்.

அதனால்தான், இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு, அரசு ஊழியர்களின் நண்பனாகத் திகழ்கிறது. தங்கள் கோரிக்கைகளை அரசு ஊழியர்களால் எளிதில் எங்களிடம் வந்து சொல்ல முடிகிறது. அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றுவதிலும் இந்த அரசு உறுதியாகச் செயல்பட்டு வருகிறது. சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் தாமதம்தானே தவிர, அவை நிராகரிக்கப்படவில்லை.

அந்தத் தாமதம் கூட பழனிசாமி உருவாக்கி விட்டுச் சென்ற நிதி நெருக்கடியால் ஏற்பட்டுள்ளதுதான். கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற இயலாத நிலைமை பற்றி அரசு ஊழியர்கள் ீ ஆசிரியர்களிடம் ஒளிவு மறைவின்றி விளக்கிச் சொல்லும் ஒரே அரசு திமுக அரசுதான்!

“உங்களுடைய அத்தனை கோரிக்கைகளையும் அச்சுப்பிசகாமல் நிறைவேற்றி தருவேன்” என்ற உறுதியை அவர்களை நேரில் அழைத்துப் பேசிச் சொல்லியிருக்கிறேன்.

இதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது பொது வாழ்க்கை நடவடிக்கையில் இருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிட்ட பழனிசாமிக்குத் தெரிய வாய்ப்பில்லை.

எனவே, தி.மு.க.வின் சாதனைகளை மறைக்க அவர் போடும் வேடம் ீ பகல் வேடமாகவே கலைந்து போகும் என்பது மட்டும் நிச்சயம்!

நிச்சயம் ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும். நாம் விரும்பும் மாற்றம் வந்தவுடன்— தமிழ்நாட்டின் நிதிநிலை விரைவில் சீராகும். அப்போது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் எஞ்சியுள்ள அத்தனை கோரிக்கைகளும் நிறைவேறும்.

எனவே, “திராவிட மாடல் அரசுக்கு அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்ற மனது இருக்கிறது. மார்க்கமும் விரைவில் வரும்” என்பதை உணர்ந்துள்ள அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நல்லதொரு மாற்றம் ஏற்பட நமது இந்தியா கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

# தேர்தலைப் புறக்கணிக்க முடிவெடுத்த தி.மு.க. ஆதரவு குடும்பத்தினர்!

## இடம் வாங்கி 17 ஆண்டுகள் ஆகியும் சொத்து வரி கட்ட முடியாததாலும், வீட்டிற்கு மின் இணைப்பு பெற முடியாததாலும் விரக்தியில் எடுத்த அதிரடி முடிவு!

### தமிழக முதல்வர் மற்றும் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க கோரிக்கை!









தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு சட்டமன்றத் தொகுதிக்குட் பட்ட அந்தனர்குறிச்சியில் உள்ள எண்: 36, அடைக்கலம் காத்த அம்மன் நகர் என்ற முகவரியில் வசித்து வருபவர் க.மஞ்சுளா. 20 வருடங்களுக்கு முன் கணவனை இழந்த மஞ்சுளா, கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து பிழைத்து வருகிறார். அதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் சிறுக சிறுக சேமித்து, மேலும் கடன் வாங்கி அடைக்கலம் காத்த அம்மன் நகரில் உள்ள ஆர்.தனலட்சுமி என்பவருக்கு சொந்தமான மனை ஒன்றை 2007—ல் வாங்கினார். அதை பதிவு செய்ய முற்போடும் போது இட உரிமையாளர் தனலட்சுமி இறந்து விட்டார்.

அதற்குப் பிறகு அந்த இடத்தை பதிவு பண்ணவும் முடியவில்லை. வரியும் கட்ட முடியவில்லை. தற்போது 15 வருடங்கள் கழித்து அந்த இடத்தில் வீடு கட்டி எளிய முறையில் கிரகப்பிரவேசமும் முடித்து விட்டார்.

அந்த வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்காக கடந்த பிப்ரவரி 3 அன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து, அதற்குக் கட்டணமாக ரூ.5,192 கட்டியுள்ளார். பிப்ரவரி 5 திங்கள் அன்று மின்வாரிய ஊழியர் அந்த முகவரிக்கு வந்து வீட்டை புகைப்படம் எடுத்துவிட்டுச் சென்றார். திருவையாறு மின்வாரிய அதிகாரி, வீட்டு உரிமையாளரைத் போனில் தொடர்பு கொண்டு விசாரணை செய்துவிட்டு, மின் வாரிய விதிப்படி Revnue Document ஏதாவது ஒன்று சமர்ப்பித்தால் மட்டுமே மின் இணைப்பு வழங்க முடியும் என கூறிவிட்டார்.

ஆனால் Revnue Document —ஐத் தவிர அந்த வீட்டு முகவரிக்கு ஆதார் கார்டு, ரேஷன் கார்டு, எரிவாயு இணைப்பு அனைத்தும் உள்ளது. இருந்தும் Revnue Document இல்லாத தால் மின் இணைப்பு பெற முடியாமல் அந்தக் குடும்பம் இருட்டிலேயே தவித்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல் அந்த வீட்டிற்கு சொத்து வரி மற்றும் வீட்டு வரியும் கட்ட முடியாமல் தவித்து வருகிறார்கள். இதற்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலகத்திற்கு பலமுறை அலைந்தும் எந்தத் தீர்வும் கிடைக்காமல் உள்ளது.

இது குறித்து தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வரின் தனிப்பிரிவிலும் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது. மனு எண்: TN/REV/TNJ/I/CCC/23FEB24/7796906

இந்நிலையில் திருவையாறு வட்டாட்சியரின் உத்தரவிற்கிணங்கி கிராம நிர்வாக அலுவலர் (விஏஓ) சம்பந்தப்பட்ட அடைக்கலம் காத்த அம்மன் நகரில் உள்ள வீட்டிற்கு சென்று நேரில் விசாரித்து திருவையாறு வட்டாட்சியரிடம் அனைத்து விவரங்களையும் தெரிவித்து விட்டார்.

இடம் வாங்கி 17 வருடங்கள் ஆகியும், வீடு கட்டி ஒன்றரை வருடங்களைக் கடந்தும் வரியோ, மின் இணைப்போ பெற முடியாமல் தவித்து வருவதால் விரக்தியில் இருக்கும் இக்குடும்பத்தினர் தற்போது தேர்தலைப் புறக்கணிக்க முடிவெடுத்துள்ளதாகவும் தெரிகிறது.





எது எப்படியோ...

திராவிட மாடல் ஆட்சியில் ஒரு விதவைக் குடும்பத்தை இப்படித் தவியாய் தவிக்க விடுவது ஏற்புடையதல்ல.

எனவே, செய்வதறியாது தவிக்கும் தங்களுக்கு முதல்வர் அவர்களும், மாவட்ட ஆட்சியர் அவர்களும் மின் இணைப்பு கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது.

# தாமதமாகும் நீதி தேங்கிக் கிடக்கும் வழக்குகள்!

## முடிந்தவரை பிணை – தவிர்க்க முடியாவிட்டால் மட்டுமே சிறை! – உச்சநீதிமன்றம் அறிவுரை!

இந்தியா 2023—இல் உலகிலேயே அதிக மக்கள்தொகையைக் கொண்ட தேசமாக மாறியது. அடுத்த ஒரு நூற்றாண்டுக்கு இந்த நிலை தொடரக்கூடும். இந்தியா மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மூன்று டிரில்லியன் டாலர் பொருளா தாரமாக உயர்ந்து பிரிட்டனை ஐந்தாவது இடத்திற்குத் தள்ளியது. இவையெல்லாம் நாம் பெருமைப்படக்கூடிய சாதனைகள் என்றால், இவைபோல அல்லாமல் தலைகுனிவை ஏற்படுத்தும் இன்னொரு "சாதனை'யையும் நாம் நிகழ்த்திக் கொண்டி ருக்கிறோம்.



இந்திய நீதிமன்றங்களில் ஐந்து கோடிக் கும் அதிகமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின் றன. எண்ம மயச் சூழலில் நீதிமன்ற இணைய தளத்தில் புள்ளிவிவரங்களைப் பார்க்க முடிகி றது. கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் உயர் நீதிமன்றங்களில் 60.6 லட்சம் வழக்குகளும், கீழமை நீதிமன்றங்களில் 4.43 கோடி வழக்கு களும் நிலுவையில் இருந்தன.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நீதிமன்றங் களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண் ணிக்கை 3.24 கோடி என்று உச்சநீதிமன்றத்தில் அப்போதைய தலைமை நீதிபதி தெரிவித்திருந் தார். அதன்படி பார்த்தால், தேங்கிக் கிடக்கும் வழக்குகளில் சராசரியாக ஆண்டொன்றுக்கு 18% அதிகரித்திருக்கின்றன. பொருளாதாரம் 6%, மக்கள்தொகை 0.8% என்று வளர்ச்சி அடைந் தால், தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண் ணிக்கை 18% வளர்ச்சி அடைகிறது என்பது பெருமைப்படக்கூடிய ஒன்றல்ல.

தேங்கிக் கிடக்கும் வழக்குகளை ஓராண் டுக்குக் கீழே, ஓராண்டுக்கும் மூன்று ஆண்டுக ளுக்கும் இடையே, அதற்கும் மேலே என்று பிரித்துப் பார்த்தால், 25% வழக்குகள் ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக விசாரணையில் இருக்கின்றன என்பது தெரியவருகிறது.

உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் இருக் கும் வழக்குகளில் நான்கில் ஒன்று பத்தாண்டு களுக்கும் மேலாக விசாரணையில் இருப்பது என்றும், வழக்குகளின் எண்ணிக்கை 10 லட்சத் துக்கும் அதிகம் என்றும் 2018 அறிக்கை யொன்று தெரிவிக்கிறது. மிக அதிகமான வழக்குகள் — ஏழு லட்சத்துக்கும் அதிகம் — அலாகாபாத் உயர்நீதிமன்றத்தில் மட்டும் தேங்கி இருக்கின்றன. கீழமை நீதிமன்றங்களில் ஏறத்தாழ 75% வழக்குகள் குற்றவியல் வழக்குகள் என்றால், உயர்நீதிமன் றங்களில் அதே அளவிலான வழக்குகள் குடிமை யியல் சார்ந்தவை.

வழக்குகள் விசாரணையில் தேங்கிக்கிடக் கின்றன என்றால், நீதி தாமதமாகிறது என்று பொருள். அதுமட்டுமல்ல, விசாரணை காலத் தில் சிறையில் அடைக்கப்பட்டு தீர்ப்புக்காக காத்துக்கொண்டிருக்கும் கைதிகளின் எண் ணிக்கையும் அதேபோல அதிகம். தீர்ப்புக்காகக் காத்திருக்கும் அந்த கைதிகளில் பெரும்பா லோர் நிரபராதிகளாகக் கூட இருக்கக்கூடும். அவர்க ளது நிலை குறித்தும், அவர்கள் சிறை யில் அடைக்கப்பட்டிருப்பதால் அவர்களது குடும் பங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்தும் யாரும் கவலைப்படுவதில்லை.

இந்தியாவில் 1,319 சிறைச்சாலைகள் இருக் கின்றன. 2021 ஆய்வின்படி, அவற்றிலுள்ள கைதி களின் சராசரி எண்ணிக்கை 130%; நான்கு சிறைச்சாலைகளில் ஒரு சிறைச்சாலையில் 150% அல்லது அதிலும் கூடுதல். வேறு சிறைச்சாலை களில் 400%—க்கும் அதிகம். 100 பேருக்கான சிறைச்சாலையில் 400 பேர் காணப்படுகிறார்கள் என்றால், அந்தச் சிறைச்சாலையில் அடிப்படை வசதிகள் எந்த அளவில் இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

சிறைச்சாலையில் இருக்கும் கைதிகள் அனைவரும் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களோ, தண்டனை வழங்கப்பட்டவர்களோ அல்லர். அவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் பூர்வாங்க விசாரணை அல்லது வழக்கு விசார ணையில் இருப்பவர்கள். சிறைவாசிகளாக இருக்கும் 5,54,034 கைதிகளில் 77% விசாரணைக் கைதிகள் என்கிறது 2021 இந்திய சிறைச்சாலை புள்ளிவிவரம்.

விசாரணைக் கைதிகளுக்கு இழைக்கப் படும் அநீதியை எதிர்கொள்ள கடந்த ஆண்டு செப்டம் பர் 18—ஆம் தேதி தேசிய சட்ட சேவை ஆணை யம், விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை யைக் குறைப்பதற்கான சிறப்பு முனைப்பை அறிவித்தது. சமீபத்தில் பணி ஓய்வு பெற்றிருக்கும் உச்சநீதிமன்ற நீதிபதி சஞ்சய் கிஷன் கௌல், அதைத் தொடங்கி வைத்தார். உச்சநீதிமன்ற விசாரணைக் கைதிகள் மறுசீராய்வுக் குழுவின் மூலம் பிணையில் வெளிவரத் தகுதியுள்ள விசாரணைக் கைதி களை அடையாளம் காணும் முயற்சி வேக மெடுத்திருக்கிறது.

கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்று காலத்தில் சிறைச்சாலைகளில் காணப்பட்ட கடுமையான இடநெருக்கடியை எதிர்கொள்ள உச்சநீதிமன்றம் உயர்நிலைக் குழுவை அமைத் தது. இடைக்காலமாகவோ, இடைக்காலப் பிணையிலோ, பரோல் எனப்படும் நன்ன டத்தை அவகாசமாகவோ விசாரணைக் கைதி களை விடு தலை செய்ய உத்தரவிட்டது. கொள்ளை நோய்த் தொற்றின் முதல் அலை யின்போது 61,000—க்கும் அதிகமான கைதிகள் வெளியேறியபோது சிறைச் சாலைகளில் இட நெருக்கடி 15% குறைந்தது.

2021 இரண்டாவது அலையின்போது மீண் டும் இடநெருக்கடி பிரச்னை எழுந்தது. விசார ணைக் கைதிகள் பிணையில் அனுப்பப்பட்ட னர். 2022—இல் தேசிய சட்ட சேவை ஆணை யத்தின் முயற்சியால் 37,000 விசாரணைக் கைதி கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கீழமை நீதிமன்றங்களில் "முடிந்தவரை பிணை; தவிர்க்க முடியாவிட்டால் மட்டுமே சிறை' என்கிற உச்சநீதிமன்ற அறிவுரையை தேசிய சட்ட ஆணையம் வலியுறுத்துகிறது. குற் றவியல் நடைமுறைச் சட்டத்தில் காணப்படும் பிணைக்கான விதிகளின் அடிப்படையில் விசார ணைக் கைதிகள் நீண்ட நாள் சிறையில் அடைக் கப்படுவதை தவிர்ப்பதற்கான முயற்சி கள் முன் னெடுக்கப்படுகின்றன. ஆனாலும் விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை குறைவதாகத் தெரிய வில்லை.

சட்டத்தின் அடிப்படையான ஆட்சியில் மூன்று மாதங்களுக்கு மேல் விசாரணைக் கைதி கள் சிறையில் அடைக்கப்படுவது ஏற்புடைய தல்ல!




சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் "விமான நிலைய காவல் ரோந்து" திட்டத்தை துவக்கி வைத்து இதில் பணி புரியும் 10 காவல் ஆளிநர்க ளுக்கு வழங்கிய பேட்ச்சுகள் வழங்கினார். இந்தக் குழுவில், சிறப்பு பயிற்சி பெற்ற 10 காவலர்களும் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்ட இரண்டு பிரத்தியோக ரோந்து வாகனம், ஒரு பேட்டரி வாகனம் மற்றும் நவீன சாதனங்களுடன் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் ரோந்து பணியில் ஈடுபடுவர்.

# எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்காவிட்டால் ராகுல்காந்தி ஒதுங்கிக்கொள்ள வேண்டும்!

## தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோர் கருத்து!

வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் எதிர்பார்க்கும் வெற்றி அக்கட்சிக்குக் கிடைக்க வில்லை எனில், ராகுல் காந்தி ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று தேர்தல் வியூக வகுப்பாளரான பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன் றுக்கு பேட்டி அளித்துள்ள அவர், "கடந்த 10 ஆண்டுகளாக ராகுல் காந்தியால் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றியை தேடித்தர முடியவில்லை. எனினும், தற்போதும் அவர்தான் காங்கிரஸ் கட்சியை வழிநடத்தி வருகிறார். கட்சியை மற்றவர்கள் நடத்த அவர் அனுமதிக்கவில்லை.

கடந்த 10 வருடங்களாக இப்படியே செயல் பட்டு வெற்றி பெறாமல் இருக்கும்போது, அவர் ஓய்வெடுத்துக்கொள்வதால் காங்கிரசுக்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டு விடாது. அடுத்த 5 ஆண்டு கள் வேறு யாராவது காங்கிரஸ் கட்சியை வழிநடத்த அவர் அனுமதிக்க வேண்டும்.

தனக்கு எல்லாம் தெரியும் என்று ராகுல் காந்தி நினைக்கிறார். உதவியின் தேவையை அவர் உணரவில்லை என்றால் யாரும் அவருக்கு உதவ முடியாது. தான் நினைப்பதைச் செய்யக் கூடிய ஒருவர் தேவை என்று அவர் நம்புகிறார். அது சாத்தியமில்லை.

காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தாலும், முக்கிய முடிவுகள் எடுப்பதில் ராகுல்தான் இறுதியானவர். ஒரு தொகுதி தொடர்பான முடிவுகளுக்கு கூட ராகுலின் ஒப்புதல் தேவை என்பதை பல தலைவர்கள் தனிப்பட்ட முறையில் ஒப்புக்கொள்வார்கள்.

எந்தவொரு தனிநபரையும் விட காங்கிர ஸும் அதன் ஆதரவாளர்களும் பெரியவர்கள் என்பதால் கட்சிக்கு வழிவிடுவதில் ராகுல் பிடி வாதமாக இருக்கக் கூடாது. காங்கிரஸை ஒரு கட்சியாக மட்டும் பார்க்கக் கூடாது. நாட்டில் அது பிரதிநிதித்துவப்படுத்தும் இடத்தை ஒரு போதும் முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடி யாது. அது சாத்தியமில்லை. காங்கிரஸ் அதன் வரலாற்றில் பலமுறை பரிணாம வளர்ச்சி யடைந்து, மறுபிறவி எடுத்துள்ளது.

சமரசம் செய்யப்பட்ட தேர்தல் ஆணையம், நீதித்துறை மற்றும் ஊடகங்களால்தான் கடந்த காலங்களில் தனது கட்சி தேர்தலில் தோல்விய டைந்தது என்ற ராகுலின் கூற்று உண்மையல்ல. இதில் ஓரளவு உண்மை இருக்கலாம் ஆனால் முழுமையான உண்மை அல்ல. 1984 ஆம் ஆண்டு முதல் மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளில் காங்கிரசின் வாக்குகள் மற்றும் இடங்கள் குறைந்து வருவதால், அதன் செயல்பாட்டில் உள்ள "கட்டமைப்பு" குறைபாடு களை கட்சி நிவர்த்தி செய்ய வேண்டும்.

கடந்த 2004 ஆம் ஆண்டு இதேபோன்ற கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டபோதிலும், ??காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தது; எனவே இத்தகைய கூற்றுக்களை முறியடித்து காங்கிரஸ் மீண்டும் வெற்றி பெறும் என்று கூறப்படுவதை நான் ஏற்க மாட்டேன்" என தெரிவித்துள்ளார்.

# பொய் வழக்கு பதிவு செய்த காவல் ஆய்வாளர் மீது வழக்கு தொடர அரசின் அனுமதி தேவையில்லை!

## உயர்நீதிமன்ற மதுரை கிளை அதிரடி உத்தரவு!

நெல்லை மாவட்டம் கூத்தங்குளி யைச் சேர்ந்த அன்றன் சேவியர் வினிஸ்டர், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:



என் வீட்டின் அருகே 2021 ஜூலையில் அபினேஷ் என்பவர் மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டார். இது தொடர் பாக கூடங்குளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். ஆனால், போலீஸார் என்னை குற்றவாளியாக சேர்த்து, கைது செய்தனர். மற்றொரு வழக்கிலும் போலீ ஸார் என்னை கைது செய்தனர். பின்னர் குண் டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைத்தனர்.

எந்த குற்றத்திலும் ஈடுபடாத என்னை காவல் ஆய்வாளர் ஜான் பிரிட்டோ மற்றும் காவலர்கள் குண்டர் சட்டத்தில் கைது செய்தனர். ஏறத்தாழ 7 மாதங்கள் சிறையில் இருந்த நான், பின்னர் விடுதலையானேன்.

இந்த வழக்கின் ஆவணங்களை நீதிமன்றத் தில் பார்வையிட்டபோது, என் மீது பொய் வழக்கு பதிவு செய்தது தெரியவந்தது. இதனால் வழக்கை ரத்து செய்யக் கோரி, உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்தேன். விசாரணை யின்போது, என்மீது புகார் அளித்தவர் நீதி மன்றத்தில் ஆஜராகி, தான் புகார் அளிக்க வில்லை என்று கூறி னார். இத னால் என் மீதான வழக்கு ரத்து செய்யப் பட்டது.

இதையடுத்து, என் மீது பொய்வழக்கு பதிவு செய்து, குண்டர் சட்டத்தில் கைது செய்து, 7 மாதங்கள் சிறையில் அடைத்த கூடங் குளம் காவல் ஆய்வாளர் ஜான் பிரிட்டோ, உதவி ஆய் வாளர் வள்ளிநாயகம், காவலர் இசக்கியப்பன் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கக் கோரி, ராதாபுரம் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன்.

காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்று கூறி, அந்த மனுவை என்னிடமே திருப்பி வழங்கி விட்டனர். இதை ரத்து செய்து, காவல் ஆய்வாளர் ஜான்பிரிட்டோ உள்ளிட் டோருக்கு எதிரான மனுவை விசாரிக்க கீழமை நீதிமன்றத்துக்கு உத் தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப் பட்டிருந்தது.

இந்த மனு, நீதிபதி நாகர்ஜுனா முன்னி லையில் விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதி தனது உத்தரவில், "காவல் ஆய்வாளர் மீது வழக்கு பதிவு செய்து, விசா ரணை நடத்த அரசி டம் முன் அனுமதி பெற வேண்டிய தில்லை என பல்வேறு வழக்குகளில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மனுதாரர் ராதாபுரம் நீதிமன் றத்தில் 2 வாரங்களுக்குள் புதிய மனு தாக்கல் செய்ய வேண்டும். அந்த மனுவை விசார ணைக்கு எடுப்பது குறித்து கீழமை நீதிமன்றமே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

# வாட்ஸ்அப், ஃபேஸ்புக் வழியாக பிரச்சாரம் செய்யும் அரசியல் கட்சிகள்!

பொதுத்தேர்தலுக்கான தேதி அறிவிக் கப்பட்டுள்ள நிலையில், கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் வேகம் எடுக்க ஆரம்பித் துள்ளது. தற்போதைய டிஜிட்டல் காலகட் டத்தில் கட்சிகள், தங்கள் பிரச்சாரத்துக்கு சமூக ஊடகங் களையே பெரிதும் நம்பியுள்ளன.

பாஜகவும் காங்கிரஸும் வாட்ஸ்அப் குழுக்கள் வழியாக மக்களை சென்றடைவதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. இந்தியா வில் 50 கோடி பேர் வாட்ஸ்அப் பயன்படுத்துகின் றனர். இந்நிலையில், 'பிரதமரிடமிருந்து கடிதம்' என்ற செய்தியை வாட்ஸ்அப் பயனா ளர்கள் ஒவ்வொருக்கும் பாஜக அனுப்பி வருகி றது. அதில், பிரதமர் நரேந்திர மோடியின் சாதனைக ளைப் பட்டியலிட்டு, அடுத்த செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்து மக்களிடம் கருத்துக் கேட்கிறது.

அதேபோல், 'My First Vote For Modi' என்ற பெயரில் இணைய தளத்தையும் பாஜக அறி முகப்படுத்தியுள்ளது. இதில் வாக்காளர்கள் மோடிக்கு வாக்களிக்க உறுதி ஏற்பதுடன், ஏன் அவர்கள் மோடிக்கு வாக்களிக்கிறார்கள் என்பத தற்கான காரணத்தையும் பகிரும் வகையில் இந்த இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. காங்கி ரஸ் கட்சியும் வாட்ஸ்அப் வழியாக அதிக எண் ணிக்கையிலான வாக்காளர்களைச் சென்றடை யும் முயற்சியில் இறங்கியுள்ளது.

வாட்ஸ்அப் தவிர்த்து, மக்களை உடன டியாக சென்றடைவதற்கான வழியாக ஃபேஸ் புக், எக்ஸ், இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக ஊடகங் களை கட்சிகள் பயன்படுத்துகின்றன. அதேபோல் யூடியூப் இன்ப்ளூயன்சர்களைப் பயன்படுத்தியும் அரசியல் கட்சிகள் பிரச் சாரத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

அதிக பின்தொடர்பவர்களைக் கொண்ட இன்ப்ளூயன்சர்களுக்கு பேட்டி கொடுப்பது, அவர்களுடைய யூடியூப் சேனல் வழியாக தங்கள் கட்சியின் முக்கியத்துவம் குறித்து பேசுவது என கட்சித் தலைவர்கள் புதிய பிரச்சார வழி முறையைக் கைகொண்டு வருகின்றனர்

2019—ம் ஆண்டு அரசியல் விளம்பரங் களுக்காக பாஜக ரூ.325 கோடியும், காங்கிரஸ் ரூ.356 கோடியும் செலவிட்டுள்ளன என்று தேர்தல் ஆணையம் தெரிவித்திருப்பது குறிப் பிடத்தக்கது

# மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த திமுக மக்களுக்கு எதையும் செய்யவில்லை-எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு!

திருவள்ளூரில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் திருவள்ளூர் மக்களவைத் தொகுதியின் தேமுதிக வேட்பாளர் கு.நல்லதம்பியை ஆதரித்து அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசினார்.

திருவள்ளூர் மக்களவைத் தொகுதியின் தேமுதிக வேட்பாளர் கு.நல்லதம்பியை ஆதரித்து திருவள்ளூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பழனிசாமி பேசியதாவது:

அதிமுக கூட்டணியைப் பற்றி போகிற இடமெல்லாம் ஸ்டாலின் விமர்சிக்கிறார். அதிமுக கூட்டணியில் அங்கம் வகிக்கிற அனைத்து கட்சிகளின் நிர்வாகிகளும், தொண்டர்களும் உழைப்பாளிகள். இவர்கள் மக்களின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்தவர்கள். ஆனால், திமுகவும், காங்கிரஸும் பணக்கார கட்சி. ஆடை கூட கசங்காமல் வாக்கு கேட்கிற தலைவர்கள் திமுகவிலும், காங்கிரஸிலும் இருக்கிறார்கள்.

இண்டியா கூட்டணி வெற்றி பெற்றால் நிறைய திட்டங்களைக் கொண்டு வருவோம் என்று ஸ்டாலின் சொல்கிறார். இது வேடிக்கையாக இருக்கிறது. ஏற்கெனவே 14 ஆண்டு மத்திய அமைச்சரவையில் இடம்பெற்ற திமுக மக்களுக்கு எதையும் செய்யவில்லை.

அதிமுக, அதன் கூட்டணிக் கட்சிகள் ஆட்சி அதிகாரத்துக்கு எப்போதும் அடிபணிந்தது கிடையாது. வாக்கு அளித்த மக்களுக்கு விசுவாசமாக இருந்து, அவர்களின் பிரச்சினைகளை




நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கூட்டணி அமைத்து மக்களவைத் தேர்தலைச் சந்திக்கிறோம். ஆட்சி அதிகாரம் மத்தியில் இருக்க வேண்டும் என்று நாங்கள் எண்ணியிருந்தால் பாஜகவுடன் கூட்டணி வைத்திருப்போம்.

தேசிய கட்சிகள், மாநில கட்சிகளைப் புறக்கணிக்கின்றன. தேசிய கட்சிகள் ஆட்சிக்கு வந்தவுடன் அவர்களின் பார்வை தேசிய அளவில் இருக்கிறதே தவிர, மாநில அளவில் இல்லை. தேசிய அளவில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரும்போது தமிழ்நாடு பாதிக்கின்ற பொழுது, கூட்டணி தர்மம் காரணமாக அதை எதிர்த்துக் குரல் கொடுக்க முடியவில்லை. எனவே வாக்களித்த மக்களுக்கு விசுவாசமாக இருப்பதற்கும், தமிழ்நாட்டின் உரிமையைப் பாதுகாப்பதற்கும், மாநில வளர்ச்சிக்காக நாடாளுமன்றத்தில் சுதந்திரமாக கருத்துகளைச் சொல்வதற்கும் கூட்டணியிலிருந்து விலகி வந்து, அதிமுக தலைமையில் வலிமையான கூட்டணி அமைத்துள்ளோம்.

2019 மக்களவைத் தேர்தலில் மு.க.ஸ்டாலின் அளித்த பல்வேறு வாக்குறுதிகளை நம்பி திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளுக்கு 38 இடங்களை மக்கள் வழங்கினர். அந்த 38 மக்களவை உறுப்பினர்களால் தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது?

அதிமுக ஆட்சியில் இருந்தபோது என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்தோம் எனச் சொல்லி நாங்கள் வாக்கு கேட்டு வருகிறோம். நீட் தேர்வைக் கொண்டு வந்தது திமுகவும், காங்கிரஸும்தான். தற்போது அதை ரத்து செய்வோம் என்று சொல்வதும் அவர்கள்தான். இப்படி இரட்டை வேடம் போடுகிற, மக்களை ஏமாற்றுகிற கூட்டணியை நம்பக்கூடாது.

அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை ஒவ்வொன்றாக ரத்து செய்து வருகிறது திமுக அரசு. போதைப் பொருள் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க இந்த அரசுக்குத் திறமையில்லை. அதிமுக ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது. கொலை, கொள்ளை உள்ளிட்ட அத்தனையும் தடுத்து நிறுத்தப்பட்டன.

இதேபோல் வட சென்னை அதிமுக வேட்பாளர் ராயபுரம் மனோவை ஆதரித்து பெரவள்ளூரில் பழனிசாமி பேசியது:

ஸ்டாலினுக்கு தேர்தல் ஜுரம் வந்துவிட்டது. ஏனென்றால் நாங்கள் பாஜக கூட்டணியில் இருந்து விலகி விட்டோம். நாங்கள் விலகினால் இவருக்கு ஏன் எரிச்சல் வருகிறது. பாஜக—அதிமுக இடையே கள்ள உறவு என்று ஸ்டாலின் கூறுகிறார். ஒரு உயர்ந்த பொறுப்பில் இருப்பவர்களுக்கு ஒரு கீழ்தரமான வார்த்தை வருகிறது என்றால் அது ஸ்டாலின் குடும்பத்துக்கு மட்டும்தான் வரும்.

அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை நிறுத்தியது தான் திமுக ஆட்சியின் சாதனை. இந்த ஆட்சி இருப்பது இன்னும் 24 அமாவாசை தான். திமுகவில் ஆள் இல்லை. 8 அமைச்சர்கள் அதிமுகவில் இருந்து சென்றவர்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

# மக்களவைக்கான ஆள் நான் இல்லை-நாம் தமிழர் சீமான்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரபல நாளிதழுக்கு அளித்த சிறப்பு நேர்காணலின் தொகுப்பு

**தேர்தலில் எப்போதும் தனித்து போட்டியிடுவதற்கான காரணம் என்ன?**

தனித்துவமான கொள்கையை முன் வைக்கும்போது தனித்து தான் போட்டியிட வேண்டும். மாற்று அரசியல் என்பது ஆளும் திராவிட கட்சிகள், இந்திய கட்சிகளின் ஆட்சி, அரசியல் கோட்பாடுகளில் இருந்து மாற்றாக இருக்க வேண்டும். மலைகளை வெட்டி விற்பவர்களிடமும், ஊழல், லஞ்சத்தில் ஊறி திளைப்பவர்களிடமும் எப்படி கூட்டணி அமைக்க முடியும்? தற்காலிக தோல்விக்காக நிரந்தர வெற்றியை இழந்துவிடக் கூடாது.

**2024 மக்களவைத் தேர்தலில் சீமான் போட்டியிடாததற்கு காரணம் ஏதும் உண்டா?**

மக்களவைத் தேர்தலில் என்னைவிட திறமை வாய்ந்த, தகுதியுடைய வேட்பாளர்களை தேர்வு செய்து நிறுத்தியிருக்கிறேன். மக்களவைக்கான ஆள் நான் இல்லை. மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பெரும்பாலும் மக்களவையிலேயே இருந்து வேலை செய்து வந்ததால் அவரது கட்சி தமிழகத்தில் வளராமலேயே போய்விட்டது. சட்டப்பேரவைக் குள் அவர் நின்று பேசியிருந்தால் இன்றைக்கு மதிமுகவை அடித்துக் கொள்ள வேறு எந்த கட்சியும் இருந்திருக்காது.

**திமுக, அதிமுக, பாஜக என 3 பெரிய கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடும் நிலையில் தனித்து போட்டியிடும் நாம் தமிழர் கட்சியால் வெற்றி பெற முடியுமா?**

தேர்தலில் தனிக்கட்சியாக நிற்கும்போது அக்கட்சியை மக்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்றே நினைப்பார்கள். ஆனால் மக்கள் அக்கட்சியை மறக்க மாட்டார்கள். கூட்டணி அமைத்திருந்தால் 5 அல்லது 6 எம்பி சீட்டுகள் நின்று வெற்றி பெற்றிருக்க முடியும். ஆனால் மக்களை முழுமையாக நம்பாதவர்கள் தான் கூட்டணிக்கு செல்வார்கள்.

நான் மக்களை முழுமையாக நம்புகிறேன். தேர்தலில் 1.1 சதவீதம் வாக்கு வாங்கிய கட்சி மறுபடியும் வளர்ந்ததே கிடையாது. ஒன்று அழிந்துவிடும் அல்லது வேறு கூட்டணிக்கு சென்றுவிடும். ஆனால் நாம் தமிழர் கட்சியின் வாக்கு சதவீதம் தொடர்ந்து அதிகரித்து கொண்டே செல்கிறது. எனவே இந்த முறை உறுதியாக நாங்கள் வெல்வோம்.

**நாம் தமிழர் கட்சி சந்திக்கும் தோல்விகளை எப்படி பார்க்கிறீர்கள்?**

தோல்விதான் வெற்றியின் தாய். எளிதில் வென்றவனின் இதயம் மலரினும் மெலிதாக இருக்கும். ஆனால் தோற்று தோற்று வென்றவனின் இதயம் இரும்பை விட உறுதியாக இருக்கும்.


**கரும்பு விவசாயி சின்னம் இன்றி தேர்தல் களம் காண்பது எப்படி இருக்கிறது?**

இந்தியாவில் சின்னம் இல்லாத தேர்தலை நடத்த முன்வர வேண்டும். வெளிநாடுகளைப் போல எண் முறைக்கு நாமும் வரவேண்டும். அல்லது ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒவ்வொரு சின்னத்தை புதிதாக கட்சிக்கு ஒதுக்க வேண்டும். கூட்டணியில் இருந்தால் அந்தந்த கட்சிகளுக்கு அவர்கள் சின்னம் கிடைத்து விடுகிறது. ஆனால் எங்களுக்கு கிடைக்க வில்லை. எனில் ஜனநாயகத்தில் எல்லோருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுவதில்லை.

**கச்சத்தீவு விவகாரத்தில் திமுக, பாஜக என இரு கட்சிகளும் தேர்தல் அரசியல் செய்கின்றனவா?**

கடந்த 10 ஆண்டுகளில் கச்சத்தீவை மீட்டு வந்து ஓட்டு கேட்டால் கூட பரவாயில்லை. ஆனால் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மீட்போம் என்று சொன்னால் எப்படி? இப்போது தான் இவர்கள் கண்களுக்கு கச்சத்தீவு தெரிகிறது. இது முழுக்க முழுக்க தேர்தல் அரசியலாகும்.

**பிரதமர் மோடியின் வருகை தமிழக அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துமா?**




எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. பாஜகவுக்கு, கர்நாடகம் வரை வந்துவிட்டோம், தமிழகத்தையும் கைப்பற்றி விட வேண்டும் என்ற கனவு இருக்கிறது. எளிதாக கைப்பற்றி விடலாம் என்று நினைக் கின்றனர். ஆனால் காங்கிரஸ், பாஜக போன்ற இந்திய கட்சிகள் தமிழகத்துக்கு தேவையில்லை. இந்த 2 கட்சிகளும் எந்த மாநிலத்தின் உரிமைகளுக்காகவும் நிற்க மாட்டார்கள்.

**பாஜகவுக்கு எதிரான வாக்குகள், திமுகவுக்கு செல்லாமல் தடுப்பதுதான் உங்களது நோக்கம் என்று கூறப்படுவது பற்றி?**

நான் பாஜகவின் பி—டீம் என கூறி எனக்கு வரவேண்டிய வாக்குகளை திமுகதான் தடுக்கிறது. உண்மையை சொல்ல வேண்டுமானால் திமுக தான் பாஜகவின் பி—டீமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. என்னை பாஜகவின் பி—டீம் என்றால் என்னிடம் ஏன் என்ஐஏ சோதனை நடத்தப்பட வேண்டும்? ஏன் எனது கட்சி சின்னம் பறிக்கப்பட வேண்டும்? நான் வளர வேண்டும் என்று நினைக்கிறேன். எனக்கு 4 பேரும் சம எதிரிகள் தான்.

**தேர்தலில் அதிகமாக செலவு செய்யும் வேட்பாளர்கள்தான் வெற்றிபெறுவார்கள் என்று நிலவும் கண்ணோட்டம் குறித்து?**

மக்கள் ஓட்டுக்காக காசு கேட்பதை வாழ்வியல் முறையாக கொண்டு வந்தது திராவிட கட்சிகள்தான். பணம் வைத்திருப்பவர்தான் அரசியல் செய்ய முடியும் என்ற நிலைமை வந்தால், முதலாளிகளுக்கான அரசியல் மட்டுமே கட்டமைக்கப்படும். மக்களுக்கான ஆட்சி கேள்விக் குறியாகிவிடும். இதனை நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

**நாம் தமிழர் கட்சிக்கான நிதி வெளிநாட்டவர்களிடம் இருந்து அதிகம் பெறப்படுவதாக வைக்கப்படும் குற்றச்சாட்டு குறித்து?**

வெளி நாட்டில் இருந்து எனக்கு அதிக நிதி வந்திருந்தால் வருமான வரித்துறை அல்லது அமலாக்கத்துறை சோதனைகள்தானே என் மீது நடத்தப் பட்டிருக்க வேண்டும். அதைவிடுத்து என்ஐஏ சோதனை ஏன் நடத்தப்பட்டது? திரள்நிதி திரட்சி மூலம் திரட்டப்படும் நிதி மூலமாகவே கட்சி செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதில் இருந்துதான் கட்சிக்கான செலவீனங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

**நாம் தமிழருக்கு மக்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?**

பாஜக, காங்கிரஸ் கட்சிகளால் நமது வாழ்நாளில் 20 ஆண்டுகள் வீணடிக்கப்பட்டு விட்டன. மாற்றம் என்பது வெறும் சொல்லாக மட்டுமில்லாமல் செயலாகவும் இருக்க வேண்டும். அதன்படி ஊழல், லஞ்சம், பசி, பஞ்சம், வறுமை, மது இல்லாத மாற்றத்தை மக்கள் விரும்பினால் நாம் தமிழருக்கு வாக்களிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# வேப்பனப்பள்ளி பகுதியில் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி தோட்டப்பயிர்களை பராமரிக்கும் விவசாயிகள்

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி பகுதியில் நிலவும் வறட்சியால், தண்ணீரை விலை கொடுத்து வாங்கி தோட்டப் பயிர்களை விவசாயிகள் பராமரித்து வருகின்றனர். வேப்பனப்பள்ளி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக பெய்த மழையால் அப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் கோடை காலத்திலும் தண்ணீர் வற்றாமல் இருந்தது.

குறிப்பாக தமிழகம் மற்றும் ஆந்திர மாநில எல்லையில் பெய்த மழையால் மார்க்கண்டேயன் நதி, குப்தா ஆறு மற்றும் இதன் நீர் ஆதாரத்தை அடிப்படையாக கொண்ட ஏரி, குளம், குட்டைகள் நிரம்பின.

இதனால், இப்பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாக விவசாயம் மற்றும் குடிநீருக்கு தட்டுப்பாடு இல்லாத நிலை நிலவியது. இந்நிலையில், கடந்தாண்டு (2023) தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவுக்கு கை கொடுக்கவில்லை.

இதையடுத்து, இப்பகுதி நீர் நிலைகள் வறண்டன. தற்போது, கோடை வெயில் உக்கிரம் அதிகரித்துள்ள நிலையில் நீர் ஆதாரங்களில் நீரின்றி வறட்சி நிலவி வருகிறது.

கடந்த 3 ஆண்டாக மானாவாரி பாசன நீர் தேவையும் பூர்த்தியான நிலையில் பல விவசாயிகள் தோட்டப் பயிர்களை அதிக அளவில் நடவு செய்துள்ளனர். தற்போதைய வறட்சியால் மா, கொய்யா, சப்போட்டா உள்ளிட்ட செடிகள் காய்ந்து சருகாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக வேப்பனப் பள்ளி பகுதி விவசாயிகள் சிலர் கூறியதாவது: எங்கள் பகுதியில் கட்ந்த 3 ஆண்டுகளாக பருவ மழை கை கொடுத்தது. இதனால், இறவை மற்றும் மானாவாரி விவசாயத்துக்கு நீர் தேவை பூர்த்தியானது. கடந்தாண்டு, பருவ மழை பொய்த்தது.



இதனால், தற்போது வறட்சி நிலவி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளில் நடவு செய்யப்பட்ட தோட்டப் பயிர்களான மா உள்ளிட்ட பலவகை பழச்செடிகள் மற்றும் மரங்களை காக்க நீர் ஆதாரம் அதிகம் உள்ள பகுதிகளில் உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் ரூ.800 முதல் ரூ.1,500 வரை விலை கொடுத்து வாங்கி டிராக்டரில் கொண்டு வந்து ஊற்றி பராமரித்து வருகிறோம்.

வரும் நாட்களில் கோடை மழை பெய்யவில்லை என்றால் இப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, இப்பகுதி மக்களின் குடிநீர் மற்றும் பாசனத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மழைக் காலங்களில் தண்ணீரை சேமிக்க தொலைநோக்குடன் கூடிய நீர்மேலாண்மை திட்டத்தை நீர் வளத் துறையினர் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# புதிய மின் இணைப்பு கோரியவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பதை நிறுத்த உத்தரவு!

## தமிழக மின்வாரியத்துக்கு ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு!

தமிழகத்தில் புதிய மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்தவர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார் எழுந்ததை தொடர்ந்து, கூடுதல் கட்டண வசூலை உடனே நிறுத்துமாறு மின்வாரியத்துக்கு ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் புதிய மின் இணைப்பு வழங்க பல்வேறு விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. அதன்படி, ஒரு கிலோவாட் மேல்நிலை கேபிள் மூலம் மின் இணைப்பு பெற ரூ.2,040—ம், நிலத்தடி கேபிள் மூலம் மின் இணைப்பு பெற ரூ.5,110—ம் மேம்பாட்டு கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், சென்னை, மதுரை,கோவை, திருச்சி உள்ளிட்ட மாநகராட்சி பகுதிகளில் புதிய மின்இணைப்பு கேட்டு விண்ணப்பித்தவர்களிடம், நிர்ணயித்ததைவிட பலமடங்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, மேல்நிலை கேபிள்மூலம் மின் இணைப்பு பெற விண்ணப்பித்தவர்களிடம் ரூ.2,040—க்குபதிலாக, நிலத்தடி கேபிள் முறைக்கான ரூ.5,110 கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும்,



இதுமட்டுமின்றி, மேலும் பல காரணங்களை கூறி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்துக்கு தொடர்ந்து புகார்கள் வந்துள்ளன.

இதைத் தொடர்ந்து, மின் இணைப்பு வழங்க கூடுதல் கட்டணம் வசூலிப்பதை உடனடியாக நிறுத்துமாறு மின்வாரியத்துக்கு ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மின் இணைப்புக்காக வசூலிக்கப்பட்ட கூடுதல் கட்டணத்தை சம்பந்தப்பட்ட மின்நுகர்வோரின் கணக்கில் திருப்பி செலுத்துவதோடு, இந்த நடைமுறையை உடனடியாக அமல்படுத்துமாறும் ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

# தமிழகத்தில் சாதி அரசியல் கணக்குகள் எடுபடுமா?



சாதி ஒழிப்பாக இருக்கட்டும், இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு கோரிக்கையாக இருக்கட்டும், தேர்தல் அரசியலில் சாதியின் முக்கியத்துவமாக இருக்கட்டும், சாதி என்ற கருத்தாக்கம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழக அரசியலில் எங்கும் நீக்கமற இருக்கிறது. இதே மாநிலம் தான், சாதிக்கு எதிராக நாட்டி லேயே வலுவான போராட்டங்களையும் கண்டுள்ளது. சாதி எதிர்ப்பின் அடையாளமாக ஒவ்வொரு வரின் பெயருக்கு பின்னால் இருக்கும் சாதிப் பெயர்களை நீக்கியதும் இதே தமிழ் நாடுதான்.

சுயமரியாதை இயக்கத்தின் தந்தையான பெரியார், சாதிப் பிரச்னையால் காந்தியுடன் முரண்பட்டு 1925ம் ஆண்டு காங்கிரஸிலிருந்து வெளியேறினார். பிராமண மற்றும் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு தனித்தனியாக உணவு வழங்குவதை எதிர்த்த பெரியார், அதை மாற்றியமைக்க முன்வரவில்லை என்றவுடன் கட்சியை விட்டு வெளியேறினார்.

எதிர்வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலிலும் சமூக நீதி, கூட்டாட்சி மற்றும் சுயமரியாதைக்கான சித்தாந்தங்களுடன் தேர்தல்களின் மிக முக்கியமான அம்சமாக சாதியும் தொடர்கிறது. குறிப்பிட்ட சமூகத்தினரின் குரலாக ஒலிக்கும் கட்சிகள் முதல் பிரதான கட்சிகள் வரை சாதியின் தாக்கம் இருக்கவே செய்கிறது, சில இடங்களில் இலைமறை காயாய், சில இடங்களில் பகிரங்கமாக. சாதி மட்டுமே இந்த தேர்தலை தீர்மானிக்கும் ஒற்றை காரணி இல்லை என்றாலும், சாதி கண்டிப்பாக அதன் பங்கை ஆற்றிக் கொண்டு தான் இருக்கிறது.

**தேர்தலில் நீடிக்கும் சாதி அரசியல் கணக்குகள்**

தலைநகர் சென்னை தவிர தமிழ்நாட்டின் பிற வடமாவட்டங்களில் வன்னியர்கள், மேற்கு மாவட்டங்களில் கவுண்டர்கள் அதற்கு அடுத்த படியாக நாயுடு உள்ளிட்ட சாதிகளும், தென் தமிழ்நாட்டில் தேவர், மறவர், அகமுடையார் என்ற முக்குலத்தோர் மற்றும் நாடார் சமூகத்தினர் வேட்பாளர்களாக களமிறக்கப்படுகின்றனர்.

தனித் தொகுதிகளை பொருத்தவரை, வட தமிழ்நாட்டில் பறையர் பிரிவினரும், தென்தமிழ்நாட்டில் தேவேந்திர குல வேளாளர் பிரிவினரும் நிறுத்தப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. அதே சமயம் தேர்தல் களத்தை பொருத்து இந்த சூழல் மாறலாம். பொது தொகுதிகளில் தலித் வேட்பாளரை நிறுத்தி வெற்றிபெறுவதை சில சமயங்களில் கட்சிகள் முயற்சித்துள்ளன. ஆதிக்க சாதி அல்லாத மற்ற சாதிகளை நிறுத்தியும் திமுக, அதிமுக போன்ற கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

இந்த கணக்குகளை மனதில் வைத்துக் கொண்டே, 2024 நாடாளுமன்றத் தேர்தல்களிலும் கிட்டத்தட்ட அனைத்து கட்சிகளும், தங்கள் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கும் போது, அந்த தொகுதியின் பிரதான சமுதாயத்தை சேர்ந்தவரை நிறுத்தியுள்ளன. சென்னை நகர்ப்புற தொகுதிகள் மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருக்கலாம்.

**"மேற்குலகில் வகுப்பு பிரிவினை போல இந்தியாவில் சாதி"**

தலித் விவகாரங்கள் குறித்த ஆய்வாளரும் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெவலப் மண்ட் ஸ்டடீஸ் மையத்தின் முன்னாள் பேராசிரியர் சி லக்ஷ்மணன் "மேற்கத்திய நாடுகளில் தேர்தல்களில் எப்படி வகுப்பு தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறதோ அது போல இந்தியாவில் சாதி ஒரு முக்கியமான தீர்மானிக்கும் சக்தியாகவே தேர்தல்களில் இருக்கிறது.

ஒரு தொகுதியில் எது பெரும்பான்மையான சாதியோ அந்த சமூகத்தின் வேட்பாளர் தான் எல்லா தரப்பிலிருந்தும் நிறுத்தப்படுவார். மிக அரிதாகவே வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் ஒரு தொகுதியில் இருப்பதை காண முடியும். அப்படி இருந்தால் அதுவும் இரண்டாவது பெரிதாக ஒரு இருக்கும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை பெறுவதற்காகவே நிறுத்தப்படுவார்" என்கிறார்.

இந்த தேர்தல் களத்தில் பணியாற்றி வரும் பெயர் குறிப்பிட விரும்பாத அரசியல் பிரமுகர் ஒருவர் கூறும் போது, "இந்த முறை கோவையில், திமுக மற்றும் பாஜக சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளர்கள் கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள். ஆனால் அதிமுக வேட்பாளர் நாயுடு சமூகத்தை சேர்ந்தவர்.

கொங்கு பகுதியில் கவுண்டர்கள் மத்தியில் அதிமுகவிற்கு அதிக செல்வாக்கு இருந்தாலும் வேற்று சமுதாய வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் அது தன் மேல் சாதி பிம்பம் வராமல் பார்த்துக் கொள்கிறது. அதே சமயம் எடப்பாடி பழனிச்சாமி, எஸ்.பி.வேலுமணி போன்ற தலைவர்களுக்காக விழும் கவுண்டர் வாக்குகளும், வேட்பாளர் தேர்வின் காரணமாக பிற சமுதாய வாக்குகளையும் கணிசமாக திரட்டமுடியும்" என்றார்.

**அரசியல் களத்தில் பாமக**

இந்தியாவின் பிற பகுதிகளை போல தமிழ்நாட்டிலும் 90களில் சாதி ரீதியிலான அமைப்புகள் அரசியல் கட்சிகளாக உரு வெடுக்க ஆரம்பித்தன.

1980களில் பொருளாதாரத்தில் நலிந்தவர்களாக இருந்த வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கான போராட்டங்களை தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி தொடங்கப் பட்டது. 1980களின் இறுதியில் மு.கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சி வன்னியர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று வகைப்படுத்தி இடஒதுக்கீடு வழங்கியது.

வன்னியர் வாக்குகளை கூடுதலாக பெற்ற பாமக, தனித்து வெற்றிபெற மற்ற சாதியினரின் வாக்குகளும் அவசியம் என்பதை கண்டது. எனவே 'சாதி கட்சி' என்ற அடையாளத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றது. ஆனாலும், சாதி வன்முறை, ஆணவக் கொலைகள் ஆகியவற்றில் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் அதனை சாதிய கட்சியாகவே மக்களிடையே பதிவு செய்கின்றன.

தலித் ஆண்கள் ஜீன்ஸ் மற்றும் கூலிங் கிளாஸ் அணிந்து பெண்களை கவர்கிறார்கள் என்று அவர்கள் முன்வைத்த வாதம் கடும் விமர்சனங்களை எழுப்பியது. தலித் அல்லாத சாதிக் கட்சிகளை திரட்டியதன் மூலமும், நத்தம் காலனி வன்முறை, இளவரசன் வழக்கு போன்றவற்றில் அந்த கட்சி மேற்கொண்ட நிலைப்பாடுகளும் சாதிய ரீதியான அணி திரட்டல் நோக்கத்துடனே அமைந்தன.

திமுக கூட்டணியில் கடந்த சில ஆண்டுகளாக பாமக இடம் பெறாததற்கு, தலித் மக்களின் அரசியல் பிரதிநிதியாக கருதப்படும், விசிக இடம் பெற்றிருப்பதே முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

பேராசிரியர் சி லக்ஷ்மணன் "பட்டியலின மக்களுக்கு என தனித் தொகுதிகள் இருந்தா லும் பட்டியலினத்தவரை முழு சுதந்திரத் துடன் செயல்பட பெரிய கட்சிகள் அனுமதிக் கவில்லை. எனவே தான் சாதி அமைப்புகளாக இருந்தவை 1990களில் விடுதலை சிறுத்தைகள் கட்சி, புதிய தமிழகம் உருவாக காரணமாக இருந்தன" என்கிறார்.

தமிழகத்தில் பிரதானமாக மூன்று முக்கிய தலித் சாதிகள் உள்ளன. முதலாவதாக, மாநிலத்தின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் பறையர் சாதி பெரும்பான்மையாக உள்ளது. திருமாவளவன் தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் கட்சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

இப்போது தேவேந்திர குல வேளாளர் என்று அழைக்கப்படும் பள்ளர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சாதிகள் மாநிலத்தின் தெற்கிலும் கடலோர டெல்டா மாவட்டங்களிலும் உள்ளனர். டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையிலான புதிய தமிழகம் இவர்களை ஓரளவு பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அருந்ததியர்கள் மற்ற இருவருடன் ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் மிகவும் குறைந்தவர்கள். விசிக மற்றும் புதிய தமிழகம் இரண்டும் தத்தமது செல்வாக்கு உள்ள பகுதிகளில் அரசியல் கட்சி கட்டமைப்புக்களை கணிசமாக நிறுவியுள்ளன.

"கடந்த சட்டமன்றத் தேர்தல்களில் விசிக இரண்டு பொதுத் தொகுதிகள் உட்பட ஆறு தொகுதிகளில் போட்டியிட்டது. நான்கு தனித் தொகுதிகளில் பட்டியலின வேட்பாளர்களை நிறுத்திய விசிக, பொதுத் தொகுதிகளில் அவர்களை நிறுத்தவில்லை. தலித் அல்லாத வேட்பாளர்கள் தான் பொதுத் தொகுதிகளில் நிறுத்தப்பட்டனர். கிட்டத்தட்ட திமுக போன்ற அதே ஃபார்முலாவை தான் விசிக கையாள நினைக்கிறார்கள்" என்றார் லக்ஷ்மணன்.

**சரத்குமார், கருணாஸ் வேட்பாளரானது எப்படி?**

மேற்கு மண்டலத்தில் கொங்கு வெள் ளாள கவுண்டர் சாதி அமைப்பில் இருந்து 2009 ஆம் ஆண்டு புதிதாக கொங்கு நாடு முன்னேற்ற கழகம் என்ற கட்சி உருவானது. அந்த கட்சி உடைந்து (2013) கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியை புதிதாக உருவாக்கினார் இஞ்சினியர் ஈஸ்வரன். கவுண்டர் சமூகத்தினருக்கு அரசு வேலைகளில் கூடுதல் இடம் வழங்க வேண்டும், மேற்கு மாவட்டங்களின் வளர்ச்சிக்கு கூடுதலான கவனம் உள்ளிட்ட கோரிக்கைகளை அந்த கட்சி வைக்கிறது.

அரசியல் அறிவியல் மூத்த பேராசிரியர் ராமு மணிவண்ணன் கூறுகையில், "சாதியை வைத்து வேட்பாளர் தீர்மானம் செய்யும் போதே, அது வாக்குவங்கி அரசியலாகிவிடுகிறது. பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்துவதும், சமரச அரசியலும் தொடங்கி விடுகிறது. ஆதிக்க சாதி மட்டுமல்லாமல் அந்த சாதியில் பணக்காரர் ஒருவரை தான் வேட்பாளராக தேர்வு செய்வார்கள்.

நடிகர் கருணாஸ் வேட்பாளராக்கப்பட சாதி என்ற அடையாளத்தை தவிர வேறு என்ன தகுதி இருந்தது. அவர் அதிமுக அணியில் போட்டியிட்டு எம் எல் ஏ ஆனார். இது பெரிய கட்சிகள் செய்யும் தவறாகும்.

சரத்குமாரால் தனியாக ஏதாவது ஒரு தொகுதியில் நின்று வெற்றி பெற முடியுமா? அவர் சமூகத்தினரே அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள். ஆனால் திமுக, அதிமுக, பாஜக என எல்லா கட்சிகளும் அவருக்கு உதவி தான் வருகின்றன. இவரை பயன்படுத்திக் கொள் ளும் கட்சிகள் சந்தர்ப்பவாதிகள் என்றால், அவர்களை பயன்படுத்திக் கொள்ளும் சரத்குமார் அவர்களை விட மேலும் சந்தர்ப்பவாதியாவார். ராதிகாவின் நாயுடு பின்புலத்தையும் சினிமா அறிமுகத்தையும் கொண்டு விருதுநகரில் வாக்கு பெற நினைக்கிறார்கள்" என்றார்.

**கொங்கு மண்டலத்தில் சாதியின் தாக்கம்**

சமீபத்தில் வள்ளி கும்மியாட்டத்தின் போது திண்டுக்கல்லில் குழுமியிருந்த பெண்களிடம் தங்கள் சமுதாய மணமகனையே திருமணம் செய்து கொள்வோம் என வாக் குறுதி பெற்றார் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொருளாளர் கே.கே.சி.பாலு. அவர் 2021ம் ஆண்டு திமுக கூட்டணியில் சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளராக நிறுத்தப்பட்டவர். தற்போது திமுக கூட்டணியில் நாமக்கல் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சூர்யமூர்த்தி சில ஆண்டுகளுக்கு முன் சாதிய வன்மத்தை தூண்டும் வகையில் பேசிய வீடியோ வைரலாகி சர்ச்சையானதால், வேட்பாளர் மாற்றப்பட்டுள்ளார்.

சேலத்தை சேர்ந்த எடப்பாடி பழனிசாமி முதல்வரான 2017ம் ஆண்டுக்கு பிறகு கவுண் டர் சமூகத்தின் அணி திரட்டல் வலுவானது.

இது குறித்துப் பேசிய அரசியல் பிரமுகர் ஒருவர், "கொங்கு நாடு முன்னேற்றக் கழகம் 2009ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களில் 12 இடங்களில் போட்டியிட்டு எந்த இடத்திலும் வெற்றிபெறவில்லை. ஆனால் ஆறு லட்சம் வாக்குகள் பெற்று, அதன்பின் வந்த தேர்தல்களில் தங்களுக்கான இடங்க ளைப் பெற அது உதவியது.

பாமகவுக்கு ஒட்டுமொத்தமாக 5% வாக்குகள் இருக்கின்றன என்றாலும், வன்னியர்கள் அதிகமாக உள்ள தொகுதிகளில் அது 10% ஆக இருக்கும். நிச்சயமாக சில தொகுதிகளில் வெற்றி தோல்வியை தீர்மானிக்கக் கூடிய சக்தி யாக அவர்கள் இருப்பார் கள். இவர்களால் பிற சாதிகளின் வாக்கு களை பெறுவது கடி னமே.

தொகுதியில் கொங்கு கட்சி சார் பாக தலித் வேட்பாளர் ஒருவரை நிறுத்தினா லும் கவுண்டர் சமூகத் தினர் வீட்டு சுவர்களில் தலித் வேட்பாளர்களின் பெயர்கள் இடம் பெறாது. கட்சி சின்னம் மட்டுமே இடம் பெறும்" என்றார்.

**முக்குலத்தோர் வாக்குகள் யாருக்கு?**

சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திர போஸ் உருவாக்கிய கட்சி பார்வர்ட் பிளாக். தமிழ்நாட்டில் அது முத்துராமலிங்க தேவரின் காலத்திலிருந்து பார்வர்ட் பிளாக், அதன் தேவர் பிணைப்புகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக உள்ளது. இந்த கட்சி தற்போது அதிமுக அணியில் உள்ளது. முத்துராமலிங்க தேவர் தனது காங்கிரஸ் எதிர்ப்பு நிலைப் பாட்டிற்காக அறியப்பட்டவர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய நண்பரான சசிகலாவின் சாதிப் பின்னணி, அந்த கட்சிக்கு முக்குலத்தோர் ஆதரவை பெற்றுக் கொடுத்தது. இப்போது அதே முக்குலத்தோர் வாக்குகளை பெற வேண்டும் என டி.டி.வி.தினகரன் மற்றும் ஓ.பன்னீர்செல்வம் இருவரும் விரும்புகிறார்கள். அப்போது தான் அதிமுகவில் தங்கள் செல்வாக்கை மீட்க முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள்.

"முக்குலத்தோர் சமூகத்தின் ஆதரவு தனக்கு இருக்கிறது என நிரூபிக்க அவர்கள் அதிகபட்சமாக இருக்கும் தேனியில் நின்று அவர்களின் வாக்குகளை ஒன்றிணைக்க நினைக்கிறார் டிடிவி தினகரன். அதே போன்று, ராமநாதபுரத்தில் நிற்கும் இஸ்லாமிய வேட்பாளரை எதிர்த்து தேவர் வாக்குகளை திரட்டிவிட முடியும் என ஓ.பி.எஸ். நினைக்கிறார். இதன் மூலம் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க முடியும். அதன் மூலம் கட்சியில் தாங்கள் தான் முக்குலத்தோர் சமூக பிரதிநிதி என்று நிரூபிக்க வேண்டும்" என்றார்

**நாடார் சமூகத்தினர் வாக்குகள் யாருக்கு?**

தென் தமிழ்நாட்டில் நாடார், தேவேந்திர குல வேளாளர் இருவருக்கு மத்தியிலும் செல்வாக்கை விரிவாக்க பாஜக விரும்புகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தனது அரசியல் தளத்தை வலுப்படுத்திய பாஜக, நாடார்கள் மத்தியில் கிடைத்த செல்வாக்கை வலுப்படுத்தி பிற மாவட்டங்களில் நுழைய விரும்புகிறது. நாடார் வாக்கு வங்கியை நம்பியே உருவான நடிகர் சரத்குமாரின் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி பாஜகவுடன் இணைக்கப்பட்டது.

திமுக, அதிமுகவிற்கும் நாடார் மத்தியில் கணிசமான செல்வாக்கு உள்ளது. இருப்பினும், கனிமொழி கருணாநிதியை தூத்துக்குடி தொகுதியில் நிறுத்தும் முடிவிற்கு அவரது தாயாரின் நாடார் சமூக பின்னணியும் ஒரு காரணம் என்று அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக் கின்றனர்.

"முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாததால் அவர்களுக்கான கவனிப்பு சற்று குறைவாகவே உள்ளது. ஒரு இஸ்லாமிய வேட்பா ளரை நிறுத்தினால் எதிரில் பெரும்பான்மை யாக இருக்கும் இந்து வேட்பாளரை நிறுத்தி வாக்குகளை திரட்டி விட முடியும் என்ற சூழல் உள்ளது. கிறித்தவர்கள் அதிகம் இருக் கும் கன்னியாகுமரியில், கிறித்துவ வேட்பா ளரை நிறுத்தாமல் காங்கிரஸ் விஜய் வசந்தை நிறுத்தியுள்ளது. விஜய் வசந்த் நாடார் வாக்குகளையும் பெற முடியும், காங்கிரஸ் வேட்பா ளர் என்பதால் கிறித்தவர்களின் வாக்குகளை யும் பெற முடியும்." என்றார் அரசியல் பிர முகர்.

"ஒரு சமூகம் சார்ந்த தலைவர்கள் தனது சமூக மக்களுக்காக உழைத்தால் கூட பரவாயில்லை. அதையும் செய்வதில்லை. அந்த சாதியில் உள்ள ஏழை மக்கள் ஏழைகளாகவே தான் இருக்கிறார்கள்" என குறிப்பிட்டார் ராமு மணிவண்ணன்.

# குற்ற வழக்குகளில் சரணடைபவர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில்தான் சரணடைய வேண்டும்

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

கொலை உள்ளிட்ட குற்ற வழக்குகளில் சரணடைபவர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களிலேயே சரணடைய வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காட்டாங்கொளத்தூரைச் சேர்ந்த திமுக நிர்வாகியான ஆராமுதன் நாட்டு வெடி குண்டு வீசி, அரிவாளால் வெட்டிக் கொல்லப் பட்டார். இந்த கொலை வழக்கில் தொடர்பு டைய 5 பேர் சத்தியமங்கலம் நீதிமன்றத்தில் சரண் அடைந்தனர்.

இந்நிலையில், இவர்கள் 5 பேரும் சத்தியமங்கலம் நீதிமன்றத்தில் சரண் அடைந்தது செல்லாது என அறிவித்து அதை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியும், இனி கொலை உள்ளிட்ட குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களிலேயே சரண் அடைய உத்தரவிட வேண்டும் என நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா முறையீடு செய்து மனுவையும் தாக்கல் செய்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவரான ஜி.மோகனகிருஷ்ணன் மனு தாக்கல் செய்தார்.

**வழிகாட்டி நெறிமுறைகள்:**

இந்நிலையில், கொலை உள்ளிட்ட குற்ற வழக்குகளில் சரண் அடைவது தொடர்பாக சில வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்து நீதி பதி என். ஆனந்த் வெங்கடேஷ் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

கொலை உள்ளிட்ட குற்ற வழக்குகளில் சரண் அடைபவர்கள் சம்பந்தப்பட்ட ஆளுகைக்குட்பட்ட நீதிமன்றத்திலேயே சரணடைய வேண்டும். அவர்கள் வேறு நீதிமன்றங்களில் சரணடைந்தால் அதுசெல்லாது. அதேபோல சரணடைவது தொடர்பாக வேறு குற்றவியல் நடுவர் முன்பாக தாக்கல் செய்யப்படும் மனுக் கள் விசாரணைக்கு




உகந்தது அல்ல. இதை மீறி யாரேனும் சரணடைந்தால் அவர்களை சிறையில் அடைக்கும்படி அந்த நீதிமன்றம் உத்தரவிட முடியாது.

மேலும், போலீஸாரால் தேடப்படுபவர் கள் வேறு நீதிமன்றங்களில் சரணடைந்தால் அந்த குற்றவியல் நடுவர் அதுதொடர்பாக அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்து அவர்களை காவலில் எடுக்க உத்தர விடலாம். இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் பதியப்படும் குற்ற வழக்குகளுக்கு மட்டுமே இந்த உத்தரவு பொருந்தும்.

இந்த உத்தரவை தலைமை நீதிபதியின் அனுமதி பெற்று தமிழகம் மற்றும் புதுச்சேரி யில் உள்ளஅனைத்து கீழமை நீதிமன்றங் களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டும் என உயர் நீதிமன்ற பதிவுத்துறைக்கு உத்தர விட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவால் குற்ற வழக்குகளில் சரண் அடைபவர்களுக்கு சட்ட ரீதியாக எந்தவொரு பாதுகாப்பும் இருக்காது என்பதால் இந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யவிருப்பதாக சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஜி. மோகனகிருஷ்ணன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

# மக்களை மிரட்டி நூதன முறையில் பணம் பறிக்கும் கும்பல்!

## உஷாராக இருக்க சைபர் க்ரைம் போலீஸார் எச்சரிக்கை!

தமிழக சைபர் க்ரைம் போலீஸார் வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

கூரியரில் போதைப் பொருள் கடத்துவதாகக் கூறி பணம் பறிக்கும் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. இந்த மோசடியில் தனியார் கூரியர் அலுவலகத்திலிருந்து பேசுவதாக ஒரு மோசடி நபர்,ஒரு நபரின் செல்போனை தொடர்பு கொண்டு பேசுகிறார்.

அந்த மர்ம நபர், சம்பந்தப்பட்ட நபர் பெயரில் போதைப் பொருள் பார்சல் வெளி நாட்டுக்கு அனுப்புவதற்கு வந்திருப்பதாகவும், அந்த பார்சலை மும்பை போலீஸார் பறிமுதல் செய்திருப்பதாகவும் கூறி, மும்பை காவல் துறை அதிகாரியிடம் பேசுமாறு கூறி கான் பரன்சிங்கில் இணைக்கிறார்.

மும்பை காவல் துறை அதிகாரி எனப் பேசும் மற்றொரு மோசடி நபர், சம்பந்தப்பட்ட நபரிடம் விசாரணை என்ற பெயரில் மறைமுகமாக மிரட்டுகிறார்.

சம்பந்தப்பட்ட நபர், அந்த பார்சலை தான் அனுப்பவில்லை என்றும், தன்னுடைய ஆதார் அடையாள அட்டை உள்ளிட்டவை தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும், அவரது வங்கிக் கணக்குகள் பண மோசடி வழக்கு களில் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கிறார். அதை ஏற்பதாக, அந்த மோசடி மும்பை காவல் துறை அதிகாரி தெரிவிக்கிறார்.

அதேவேளையில் அந்த மோசடி நபர், சம்பந்தப்பட்ட நபரிடம் ரிசர்வ் வங்கி அதிகாரியைத் தொடர்பு கொண்டு அவரது வங்கி கணக்கை மோசடிக்கு பயன்படுத்தவில்லை என்பதைப் பார்க்க வேண்டும் என் றும், வங்கிக் கணக்கை புதுப்பித்துக் கொள்ளு மாறும் கூறுகிறார். மேலும் செல்போன் கான்பரன்சிங் இணைப்பில் ரிசர்வ் வங்கி அதிகாரி என மற்றொரு மோசடி நபரை சேர்த்துக் கொள்கிறார்.

ரிசர்வ் வங்கி அதிகாரி எனப் பேசும் அந்த நபர், பாதிக்கப்பட்ட நபரின் வங்கிக் கணக்கு விவரம், பணப்பரிமாற்ற விவரம் உள்ளிட்ட தகவல்களைக் கேட்டுவிட்டு, பாதிக்கப்பட்டவரின் கணக்குகளைப் பயன்படுத்தி மோசடி நடைபெற்றுள்ளதா, என்பதை ரிசர்வ் வங்கி கண்டறிவதற்காக, சம்பந்தப்பட்ட நபர் பெரும் தொகையைக் குறிப்பிட்ட வங்கிக் கணக்கு மாற்றி பணப்பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார்.

இதை நம்பி அந்த நபர், அந்த வங்கிக் கணக்குக்கு பணத்தை அனுப்புகிறார். பணம் அந்த மோசடி நபரின் வங்கிக் கணக்கு சென்றதும், செல்போனில் அதுவரை தொடர்பு கொண்ட அனைத்து மோசடி நபர்களும் தங்களது இணைப்புகளைத் துண்டித்து, தங்களது செல்போன்களை ஸ்விட்ச் ஆப் செய்துவிடுகின்றனர்.

இந்த மோசடியில் பொதுமக்கள் சிக்கா மல் இருக்க, கைப்பேசிக்கு திடீரென வரும் அறிமுகம் இல்லாத அழைப்புகளை எச்சரிக்கை யுடன் கையாள வேண்டும். சுய விவரங்களை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் கேட் டால், அந்த நபர் அதிகாரப்பூர்வமாக வாடிக் கையாளர் சேவை மையத்தில் இருந்து பேசு கிறாரா, அந்த நபர் அந்த நிறுவனத்தில் பணி புரிகிறாரா என்பதை சரிபார்க்க வேண்டும். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.




தேனி மாவட்டம் பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு ஆண்டிபட்டி பேருந்து நிலையம் அருகில் உள்ள கூட்டுறவு பண்டக சாலையில் குடும்ப அட்டைதாரர்களிடம் தேர்தல் விழிப்புணர்வு துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கும் பணியினையும் ஆசாரிபட்டி அருகில் உள்ள தனியார் எரிவாயு உருளை நிறுவனத்தின் மூலம் நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கும் பணியினையும் எரிவாயு உருளைகளில் தேர்தல் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளையும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மாவட்டகலெக்டர்ஆர்.வி.சஜீவனா தொடங்கி வைத்தார்.

# தமிழகத்தில் வடமாநிலக் குழந்தைக் கடத்தல் கும்பல் உலவுவது உண்மையா?-சிறப்பு பார்வை!



கடந்த இரண்டு மாதங்களாக, வடமாநிலத்தைச் சேர்ந்த ஒரு கும்பல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் குழந்தைகளைக் கடத்திச் செல்வதாக சமூக வலைதளத்தில் போலியான தகவல் பரப்பப்படுகிறது. இதனால், சில வட மாநிலத்தவர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இந்நிலையில், இந்தப் போலிச் செய்தியை பரப்பிய இருவரை திண்டுக்கலில் போலீசார் கைது செய்துள்ளனர்.

தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்க்கும் குழு இந்த காணொளிகளைச் சரிப்பார்த்து அவை போலியானவை என்று உறுதிப் படுத்தியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக, தமிழ்நாட்டில் வடமாநிலத்தைச் சேர்ந்த ஒரு கும்பல் குழந்தைகளைக் கடத்திச் செல்வதாக ஒரு காணொளி சமூக வலைதளங்களில் பகிரப் பட்டு வருகிறது. இதைப் பரப்புபவர்கள் ‘குழந் தைகளை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்’ என்ற தகவலையும் பகிர்ந்து வருகின்றனர். இதன் காரணமாக, சென்னை, திண்டுக்கல், உட்பட பல இடங்களில் வடமாநில இளை ஞர்களை ‘குழந்தை கடத்தல்காரர்கள்’ என சந்தேகித்து அவர்களைப் பிடித்து பொதுமக்கள் அடிக்கும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, கடந்த மாதம், சென்னை அருகே பம்மலில் குழந்தைக் கடத்தலில் ஈடு பட்டதாகக் கூறி ஒரு திருநங்கையை வட மாநிலத்தவர் என்று தவறாகச் சந்தேகித்து மக் கள் தாக்கினர். இது தொடர்பாக காவல் துறையினர் இருவரை கைது செய்தனர். மற்றொரு சம்பவத்தில், திருவொற்றியூர் பகுதியில் தூய்மைப் பணி மேற்கொண்டு வந்த பிகாரைச் சேர்ந்த வட மாநில இளைஞரை அப்பகுதி யைச் சேர்ந்த மக்கள் கடந்த பிப்ரவரி 27—ஆம் தேதி தாக்கினர். அதேபோல் சென்னையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சம்பவங்கள் நடைபெற்று வந்தன.

இதன்பிறகு, காவல்துறையினர் அந்தக் காணொளி உண்மையானதல்ல யாரும் நம்ப வேண்டாம் என பொதுமக்களிடம் செய்தியறிக்கை மூலமாகவும், ஊடகங்கள் மூலமா கவும் கேட்டுக் கொண்டனர்.

ஆனால், இந்தக் காணொளி தற்போது சென்னையைத் தாண்டி நாகப்பட்டினம், காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல், விழுப்புரம், என தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பரவத் துவங்கி இருக்கிறது.

### திண்டுக்கலில் இளைஞர் மீது தாக்குதல்

மார்ச் மாதத்தின் துவக்கத்தில், இந்தக் காணொளி, திண்டுக்கலில் பரவியது. குழந்தை கடத்தல் கும்பல் ஒன்று சுற்றித் திரிவதாக செய்தி பரப்பப்பட்டது. இதன் விளைவாக, வேடசந்தூர் பகுதியில் வடமதுரை அருகே கொம்பேறிபட்டி கிராமத்தில் சுற்றித்திரிந்த ஓர் இளைஞரை அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பிடித்துள்ளனர். அவரிடம் பேச முயன்ற போது அவர் வடமாநிலத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்திருக்கிறது. இதனையடுத்து, அந்த இளைஞரை கிராம மக்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அதன் பின்னர், வட மாநில இளைஞர் பிடிபட்டது தொடர்பான தகவலை காவல் துறைக்கு அளித்தனர். அங்கு வந்த காவல் துறையினர் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி அந்நபரை மீட்டுச் சென்று விசாரித்த தில் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் எனத் தெரியவந்தது.

இதனைத்தொடர்ந்து காவல்துறையினர், அவருக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை வழங்குவதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்து, பின்னர் அவரை அங்கிருந்த ஒரு மனநல காப்பகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

### வதந்தி பரப்பிய இருவர் கைது

இது குறித்து காவல்துறை கண்காணிப்பாளர் அ.பிரதீப் கூறுகையில், “வேடசந்தூரில் தனியார் தொலைகாட்சி சேனலின் லோகோவைப் போலியாகத் தயார் செய்து, இந்த போலிச் செய்தியைப் பரப்பிய பாம்புலுப் பட்டியைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் தங்கராஜ் (23), ஒட்டன்சத்திரம் பகுதியில் குழந் தைகள் கடத்தப்படுவதாக பொய் செய்தி பரப்பி விருதுநகர் மாவட்டம் அருப்புக் கோட்டையைச் சேர்ந்த வடிவேல் முருகன் (30) ஆகிய இருவரும் இந்திய தண்டனைச் சட்டம் 504, 507, சமூக வலை தளத்தில் பயன்படுத்தி பொய் செய்தி பரப்பிய தால் ஐடி பிரிவின் 65, 67 பிரிவுகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாகத் தெரிவித்தார். மேலும், “குழந்தைகள் கடத்தப்படுவதாகப் பரவும் தகவலை மக்கள் நம்ப வேண்டாம், இது போன்ற செய்திகளை யாருக்கும் பகிர வேண்டாம்" என்றார் பிரதீப்.

### விளிம்பு நிலை சமூகம் குறிவைப்பு

இது குறித்து, தமிழ் நாடு அரசின் உண்மை சரிபார்க்கும் குழுவின் திட்ட இயக்குநரான ஐயன் கார்த்திகேயன் கூறுகையில், இது போன்ற போலிச் செய்திகளின் முலம் விளிம்பு நிலை சமூகம் குறி வைக்கப்படுவதாகத் தெரி வித்தார்.

"தமிழ்நாட்டில் குழந்தைகளை கடத்தும் கும்பல் சுற்றி வருவதாக பரப்பப்படும் செய்தி ஒரு வதந்தி. இந்தக் காணொளிகள் வட இந்தியா, வெளிநாடுகளில் எடுக்கப்பட்டவை. இங்கே தவறான தகவலுடன் பரப்பட்டு வரு கின்றன. இதில் வடமாநிலத்தவருக்கு எதிராக மட்டுமே வீடியோக்கள் பரப்பப்படுவதில்லை," என்றார்.

“சென்னையில் ஒரு திருநங்கை, மனநலம் பாதிக்கப்பட்டவர், உணவு டெலிவரி செய்யும் பணியாளர் என விளிம்பு நிலையில் இருக்கக் கூடியவர்களை கடத்தல் கும்பல் என்ற தவ றான கண்ணோட்டத்தில் பார்த்து மக்கள் அச்ச உணர்வில் தாக்கி வருகின்றனர். தமிழ் நாடு ஃபேக்ட் செக் யூனிட் (TN Fact Check) என்ற சமூக வலைதளப் பக்கத்தில் இது போன்ற பொய் வீடியோக்களால் நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவங்களின் உண்மைத் தகவலை பதிவு செய்து வருகிறோம்," என்றார்.

மேலும் பேசிய அவர், “குழந்தைகள் கடத்தப்படுவதாக வரும் தகவல்கள் அனைத்தும் பொய்யானவை. மக்களுக்கு சமூக ஊடகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். முன் னர் தூய்மை வாகனத்தில் ஒலிப் பெருக்கி அறி விப்பு ஆகிவவற்றின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். இது போன்ற செய்திகள் வந்தால் மக்கள் 1098, 100, 120 என்ற எண்களுக்கு அழைத்து காவல்துறையினருக்கு தகவல் அளிக்கலாம்," என்றார்.

### "குழந்தை கடத்தல் வதந்தி சமூகப் பதற்றத்தை உருவாக்கும்"

இது குறித்து பனியன் மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் திருப்பூர் மாவட்டப் பொதுச்செயலாளர் ஜி. சம்பத் கூறுகையில், தமிழ்நாட்டில் வட மாநில இளைஞர்கள் குழந்தைகளை கடத்துவதாக பரப்பப்பட்டு வரும் வதந்தி, இனவாதக் கருத்துக்களை பேசுபவர்களால் திட்டமிட்டு பரப்பப்படுகிறது, என்றார்.

“இதுபோன்ற வதந்திகளால் திருப்பூர், கோவை மாவட்டங்களில் பதற்றம் ஏற்படும். இப்படித்தான் கடந்த ஆண்டு, திருப்பூரில் வட மாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாக பிகாரிலிருந்து பொய் செய்தி பரப்பப்பட்டு வட மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளியேறினர். எனவே, அரசு இதுபோன்ற வதந்திகளைத் தடுக்க தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு, இவை தொடர்ந்து பரப்பப் படுவதை தடுக்க வேண்டும் தமிழ்நாட்டில் உள்ள வட மாநிலத் தொழிலாளர்களை அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்து, முறைப்படுத்தினால் இது போன்ற செய்திகள் பரப்பப் படும் போது அதனை தடுக்கலாம்" என்றார்.

தமிழ்நாட்டில், திண்டுக்கல், நாகை ஆகிய மாவட்டங்களில் குழந்தை கடத்தல் தொடர்பாக வதந்தியை பரப்பிய 6 பேர் மீது காவல்துறை வழக்கு பதிவு செய்து சிலரைக் கைது செய்துள்ளது. மேலும் சமூக வலை தளத்தில் காவல்துறையினர் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி இருக்கின்றனர். பொய்ச் செய்தி பரப்பும் நபர்கள் மீது சட்டரீதியான நட வடிக்கைகள் எடுக்கப்படும் எனக் காவல்துறை உயர் அதிகாரிகள் கூறுகின்றனர்.



பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் திண்டுக்கல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி நேரில் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார்.

# ஜனநாயகம் காக்கும் முதல்முறை வாக்காளர்கள்!



‘நூறு இளைஞர்களை என்னிடம் தாருங்கள்; தேசத்தை மாற்றிக் காட்டுகிறேன்’ என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். விடுதலை வேட்கையை கவிதைகளால் தூண்டிய பாரதியாரும் இந்த சக்தியை உணர்ந்தே, ‘இளைய பாரதத்தினாய் வா வா வா, எதிரிலாவலத்தினாய் வா வா வா’ என்று அழைப்பு விடுத்தார். இதே போல் பிரதமர் நரேந்திர மோடியும், இளைஞர்கள், மகளிர், விவசாயிகள், ஏழைகள் ஆகியோரை 4 பெரிய சாதிகள் என வகைப்படுத்துகிறார்.

அரசியலமைப்பு சட்டப்படி ஐந்து ஆண்டு களுக்கு ஒருமுறை தேர்தல் வருகிறது என்றாலும், வாக்காளர் சேர்ப்பு இடையறாது நடந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் தேதி அன்று 18 வயது நிரம்பும் அனைவரும் வாக்காளராகப் பதிவு செய்து கொள்ளலாம். வாக்கா ளர் பெயர் சேர்ப்புக்கான முகாம்களிலோ அல்லது அலுவலகங்களுக்கு சென்றோ படிவம் பூர்த்தி செய்து பெயர் சேர்க்கும் நடைமுறை இருந்தது.

இதை, டிஜிட்டல் யுகம் மாற்றிவிட்டது. இப் போது இணையதளம் வழியாகவே 6–ம் எண் படி வத்தைப் பூர்த்தி செய்து வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்த்துக்கொள்ள முடிகிறது. இதன் பயனை அண்மையில் வெளியிடப்பட்ட இந்திய அளவிலான வாக்காளர் பட்டியல் வழியாக அறியலாம்.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா இந்த முறை 18–வது மக்களவையை அமைப்பதற்கான தேர்தலை சந்திக்கிறது. 2019–ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கான வாக்காளர் எண்ணிக்கை 89.6 கோடியாக இருந்தது. 2024–ம் ஆண்டு தேர்தலுக்கு 96.88 கோடியாக உயர்ந்துள்ளது. 5 ஆண்டுகளில் சுமார் 7 கோடி வாக்காளர்கள் தங்களைப் பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ள னர். இவர்களில் 2019–ல் 45.64 லட்சமாக இருந்த மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் எண்ணிக்கை, 2024–ல் 88.35 லட்சமாகி விட்டது. 2019–ல் 39,683 ஆக இருந்த மூன்றாம் பாலின வாக்காளர்கள் எண் ணிக்கை இப்போது 48,044 ஆக அதிகரித்துள்ளது.

புதிதாக வாக்களிப்பவர்களில் 18 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எண்ணிக்கை 2019–ல் 1.5 கோடியாக இருந்தது. இது 1.85 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த உயர்வில் தமிழ்நாட்டின் 5.2 லட்சம் புதிய வாக்காளர்களும் அடங்குவர். நாடு முழுவதும் சுமார் 20 கோடி வாக்காளர்கள் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர்.

ஒட்டுமொத்த வாக்காளர்களில் 49.7 கோடி பேர் ஆண்கள். 47.1 கோடி பேர் பெண்கள். இந்த தேர்தலில் 100 வயதை கடந்த 2,38,791 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

முதல் முறையாக வாக்களிக்க உள்ள இளைஞர்களின் வாக்கு புதிய இந்தியாவைக் கட்டமைக்க உதவும் என்பதற்காகத்தான் 'எனது முதல் வாக்கு–தேசத்திற்காக' என்றஇயக்கத்தை தேர்தல் ஆணையம் முன்மொழிந்துள்ளது. இதனை,பிரதமர் மோடியும் வழிமொழிந்துள்ளார். வாக்களிப்பது கடமை மட்டுமல்ல; ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் உரிமையும் கூட.

‘ஒரு வாக்கு, ஒரு மதிப்பு' என்ற சமத்துவ ஜனநாயகக் கோட்பாட்டை 1950–ல் பிறக்கும்போதே உலகுக்கு உணர்த்தியது இந்தியக் குடியரசு. அதன் அடிப்படையான ஜனநாயக மாண்பை பாதுகாப்பதில் இளைஞர்களின் பங்கு மகத்தானது.

பொதுவாக ஒவ்வொரு வாக்கும் அவரவர் விருப்பத்தையும் தெரிவையும் அச்சமின்றி, சுதந்திரமாக, நியாயமாக வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை. குறிப்பாக,முதல்முறை இளம் வாக்காளர்க ளின் விருப்பமும் தெரிவும் எதிர்காலத்தின் அளவுகோலாக மதிப்பிடப்படும். எனவே, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதில் காட்டப்படும் ஆர்வம் வாக்களிப்பதிலும் பிரதிபலிக்க வேண்டும். முதல் வாக்காளர், வாக்குச்சாவடியின் முதலாவது வாக்காளராக நிற்பதில் வெளிப்பட வேண்டும்.

டிஜிட்டல் யுகத்தில் வாழும் இளைஞர்கள் தங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் இணையத்திலேயே தேடித் தெரிந்து கொள்கின்றனர். இதனால், மத்திய தேர்தல் ஆணையமும் அதற்கான வழிகளை வகுத்துள்ளது. வாக்குச்சாவடிகளுக்கு வழிகாட்டவும் எவரும் தேவையில்லை.

இளம் தலைமுறை விரும்பும் இணையங்களிலேயே அறிந்து கொள்ளலாம். வாக்களிக்க தயாராக உள்ள பாதையில், இளம் தலைமுறை பயணம் சிறந்த ஜனநாயக ஆட்சியை தேர்வு செய்யும். நம் நாட்டின் ஜனநாயக விழுமியம் காப்பதில் இது முக்கியப் பங்களிப்பாகவும் இருக்கும்.

# பலமுனைப் போட்டி யாருக்கு லாபம்?

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் உச்சகட்டத்தை எட்டியிருக் கும் நிலையில், மாநிலத்தில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., நா.த.க. என பலமுனைப் போட்டி ஏற்பட்டிருக்கும் நிலையில் போட்டி தீவிரமடைந்திருக்கிறது.

தி.மு.க. கூட்டணியில், காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், ம.தி.மு.க., மக்கள் நீதி மய்யம், கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி ஆகியவை இடம்பெற்றுள்ளன. அ.தி.மு.க. கூட்டணியில், அ.தி.மு.க., தே.மு.தி.க, புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ. ஆகிய கட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன.

பா.ஜ.க. கூட்டணியைப் பொறுத்தவரை, பா.ஜ.க., பா.ம.க., டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய ஜனநாயகக் கட்சி, புதிய நீதிக் கட்சி, தேவநாதனின் இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம், ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், ஓ. பன்னீர்செல்வத்தின் அணி ஆகியவை இடம் பெற்றுள்ளன. ஓ. பன்னீர்செல்வத்தின் நிலைப்பாடு தெரியாததால், பா.ஜ.க. கூட்டணியை முடிவுசெய்வது இழுத்துக் கொண்டே போனது.

**நாம் தமிழர் கட்சி 40 இடங்களிலும் தனித்துப் போட்டியிடுகிறது.**

எல்லா கட்சிகளுமே தங்கள் வேட்பாளர்களை அறிவித்து, பரப்புரையில் இறங்கிவிட் டன. இந்தியா கூட்டணியில் காங்கிரஸ் கட்சி மட்டும் மயிலாடுதுறை தொகுதிக்கு வேட்பாளரை இன்னும் அறிவிக்கவில்லை.

**இந்தியத் தேர்தல் வரலாற்றில் பலமுனைப் போட்டிகள்**

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு தமிழ்நாட்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் இதுபோல பலமுனைப் போட்டி நிலவுவது ஒன்றும் புதிதல்ல. 1951ல் நடந்த பொதுத் தேர்த லில் துவங்கி, 1991 வரையிலான தேர்தல்களில் 1962, 1967ஆம் ஆண்டு தேர்தல் தவிர்த்த அனைத்து நாடாளுமன்றத் தேர்தல்களிலுமே இரு முனைப் போட்டிதான் நிலவியது. 1962, 1967 ஆகிய தேர்தல்களில் மட்டும் காங்கிரஸ் — தி.மு.க. — இடதுசாரிகள் என மும்முனைப் போட்டி நிலவியது.

ஆனால், 1991க்குப் பிறகு தமிழ்நாட்டில் கட்சிகள் உடைந்ததால், புதிய கட்சிகள் துவங்கப்படுவதால் காட்சிகள் மாறின. ஆகவே, 1996ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் பலமுனைப் போட்டிதான் நடைபெற்று வருகிறது.

1996ல் நடந்த தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி, தி.மு.க. கூட்டணி, ம.தி.மு.க. — இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி, பா.ம.க. — திவாரி காங்கிரஸ் கூட்டணி என நான்கு முனைப் போட்டி நிலவியது. 1998, 1999, 2004, 2009 நாடாளுமன்றத் தேர்தல்களில் மும்முனைப் போட்டி நிலவியது.

ஆனால், 2014ல் தேசிய கட்சிகளுக்கும் மாநிலக் கட்சிகளுக்கும் இடையில் கூட்டணி ஏற்படாமல் போன நிலையில், அந்தத் தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க. — தே.மு.திக. கூட்டணி, காங்கிரஸ், இடதுசாரிக் கூட்டணி என ஐந்து முனைப் போட்டி ஏற்பட்டது.

அதேபோல, 2019ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க. உடைந்ததோடு, நாம் தமிழர், மக்கள் நீதிமய்யம் என புதிய கட்சிகளும் களத்தில் இறங்கியதால், அ.தி.மு.க., தி.மு.க., அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், நாம் தமிழர், மக்கள் நீதி மய்யம் என ஐந்து முனை போட்டி நிலவியது.

இப்போது, கடந்த தேர்தலில் தனியாக நின்ற கட்சிகள் கூட்டணியில் ஐக்கியமாகியிருப்பதால், மீண்டும் நான்கு முனைப் போட்டிக்கு திரும்பியிருக்கிறது தேர்தல்களம்.

ஆனால், தேர்தல் ஆய்வாளர்களைப் பொறுத்தவரை ஒரு கட்சியையோ, அணியையோ ஒரு முனையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட அளவு வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்.

"அந்த மூன்றாவது கட்சியோ அல்லது அணியோ கடந்த தேர்தலில் ஆறில் ஒரு சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். அதா வது, ஒரு வேட்பாளர் தனது டெபாசிட்டைத் திரும்பப் பெற, பெற்றிருக்க வேண்டிய வாக்கு சதவீதமான சுமார் 16.6 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சியோ, அணியோதான் ஒரு முனையாக இருக்க முடியும். அப்படிப் பார்த்தால், பெரும்பாலான தேர்தல்களில் தமிழ்நாட்டில் இரு முனைப் போட்டியே நிலவியிருக்கிறது" என்கிறார் ஷ்யாம்.

**எந்தெந்த தொகுதிகளில் மும்முனைப் போட்டி**

கடந்த தேர்தல் முடிவுகளை வைத்துப் பார்தால், இந்தத் தேர்தலிலும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. அணிகள் மட்டுமே அந்த அளவுக்கு வாக்கு சதவீதத்தைப் பெற்றிருந்தன.

ஆகவே, இந்த முறையும் இருமுனைப் போட்டி என்றுதான் சொல்ல வேண்டும் என்றாலும், சில தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணியின் முக்கியமான வேட்பாளர்கள் களத்தில் இறங்கியிருப்பதால், அந்தத் தொகுதிகள் மட்டும் மூன்று முனைப் போட்டியைச் சந்திப்பதாகச் சொல்லலாம். மிகச் சில இடங்களில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள், கட்சியின் பொதுவான வாக்கு சதவீதத்தைவிட கூடுதல் வாக்கு சதவீதத்தைப் பெறக்கூடும்.




ஒரு இடத்தில் மூன்று முனைப் போட்டி நிலவும்போது, அந்தத் தொகுதியில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களுக்கும் இடையில் வாக்குகள் பிரிந்து, அந்தத் தொகுதியில் வெற்றி பெறும் வேட்பாளரின் வாக்கு வித்தியாசம் மிகக் குறைவானதாகவே இருக்கும்.

கடந்த ஆண்டு தேர்தலில் தேனி தொகுதிதான் மிகக் கடுமையான மும்முனைப் போட்டியை சந்தித்தது. தி.மு.க. கூட்டணியின் சார்பில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும் அ.தி.மு.க. கூட்டணியில் ஓ.பி.எஸ். ரவீந்திரநாத்தும் அ.ம.மு.கவின் சார்பில் தங்க தமிழ்ச்செல்வனும் போட்டியிட்டனர்.

இதில் ரவீந்திரநாத் 5,04,813 வாக்குகளைப் பெற்றார். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் 4,28,120 வாக்குகளையும் தங்க தமிழ்ச்செல்வன் 1,44,050 வாக்குகளையும் பெற்றனர். ரவீந்திரநாத் 76,693 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே வெற்றி பெற்றார்.

(வேறு சில தொகுதிகளில் வாக்கு வித்தியாசம் மிகக் குறைவாக இருந்தாலும், அவை தி.மு.க.—அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர் களுக்கு இடையிலான போட்டி கடுமையாக இருந்ததால் அம்மாதிரி நிலை ஏற்பட்டது. உதாரணமாக சிதம்பரம், வேலூர் தொகுதி களில் அதுபோன்ற நிலை ஏற்பட்டது)

இந்த முறை பின்வரும் 11 தொகுதிகள் மூன்று முனை போட்டியை எதிர்கொள்வதாகச் சொல்லலாம்:

1. தென்சென்னைத் தொகுதி (தி.மு.க. சார்பில் தமிழச்சி தங்கபாண்டியன், அ.தி.மு.க. சார்பில் ஜெ.ஜெயவர்தன், பா.ஜ.க. சார்பில் தமிழிசை சௌந்தர்ராஜன்),

2. வேலூர் தொகுதி (தி.மு.க. சார்பில் கதிர் ஆனந்த், அ.தி.மு.க. சார்பில் எஸ். பசுபதி, பா.ஜ.க. கூட்டணி சார்பில் ஏ.சி. சண்முகம்),

3. தர்மபுரி தொகுதி (அ.தி.மு.க., தி.மு.க., வேட்பாளர்கள் தவிர, பா.ஜ.க. கூட்டணி சார்பில் சௌமியா அன்புமணி),

## விரிவான அலசல்!

4. நீலகிரி தொகுதி (தி.மு.க. சார்பில் ஆ. ராசா, அ.தி.மு.க. சார்பில் லோகேஷ் தமிழ்ச் செல்வன், பா.ஜ.க. சார்பில் மத்திய இணையமைச்சர் எல். முருகன்),

5. கோயம்புத்தூர் தொகுதி (தி.மு.க. சார்பில் கணபதி ராஜ்குமார், அ.தி.மு.க. சார்பில் சிங்கை ராமச்சந்திரன், பா.ஜ.க. சார்பில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் கே.அண்ணா மலை),

6. பெரம்பலூர் தொகுதி (தி.மு.க. சார்பில் அருண் நேரு, அ.தி.மு.க. சார்பில் சந்திர மோகன், பா.ஜ.க. கூட்டணி சார்பில் பாரிவேந்தர்),

7. தேனி தொகுதி (தி.மு.க. சார்பில் தங்க தமிழ்ச்செல்வன், அ.தி.மு.க. சார்பில் வி.டி. நாராயணசாமி, பா.ஜ.க. கூட்டணி சார்பில் டிடிவி தினகரன்),

8. விருதுநகர் (தி.மு.க. கூட்டணியில் சார்பில் காங்கிரசின் மாணிக்கம் தாகூர், அ.தி.மு.க. கூட்டணியின் சார்பில் தே.மு.தி.கவின் விஜய பிரபாகரன், பா.ஜ.க. கூட்டணி சார்பில் ராதிகா சரத்குமார்),

9. ராமநாதபுரம் (தி.மு.க. கூட்டணி சார்பில் முஸ்லீம் லீகின் நவாஸ் கனி, அ.தி.மு.க. சார்பில் ஜெயபெருமாள், பா.ஜ.க. கூட்டணி சார்பில் ஓ. பன்னீர்செல்வம்),

10. திருநெல்வேலி (காங்கிரசின் சார்பில் சி. ராபர்ட் ப்ரூஸ், அ.தி.மு.க. சார்பில் எம். ஜான்சி ராணி, பா.ஜ.க. கூட்டணி சார்பில் நயினார் நாகேந்திரன்),

11. கன்னியாகுமாரி (காங்கிரஸ் சார்பில் விஜய் வசந்த், அ.தி.மு.க. சார்பில் நாசரேத் பசிலியான், பா.ஜ.க. கூட்டணி சார்பில் பொன். ராதாகிருஷ்ணன்).

இந்த 11 தொகுதிகளிலும் தென் சென்னை, வேலூர், நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திருநெல்வேலி, பெரம்பலூர் ஆகிய தொகுதிகளில் கடுமையான போட்டி நிலவுவதாகச் சொல்லலாம். பா.ஜ.கவின் முக்கியத் தலைவர்கள் போட்டியிடுவது, பா.ஜ.கவுக்கு அடிப்படையிலேயே செல்வாக்குமிக்க தொகுதியாக இருப்பது போன்ற காரணங்களால் இந்தத் தொகுதிகள் மும்முனைப் போட்டியை எதிர்கொள்கின்றன.

மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம் கூறுகையில், "அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரு கட்சிகளுக்கும் எல்லாத் தொகுதிகளிலும் குறிப்பிடத்தக்க வாக்கு சதவீதம் உண்டு. இதைத் தாண்டி மற்றொரு கட்சியின் வேட்பாளர் வெற்றிபெற வேண்டுமென்றால் நன்கு அறியப்பட்டவர்களாக, தொகுதிக்குள் தொடர்ந்து பணியாற்றியவர்களாக இருக்கவேண்டும்.

அவர்களுக்கு எதிரான அம்சங்கள் ஏதும் அந்தத் தொகுதியில் இருக்கக்கூடாது. அப்ப டிப் பார்க்கும்போது நயினார் நாகேந்திரன், டி.டி.வி. தினகரன், ஏ.சி. சண்முகம், பாரிவேந்தர், பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் மூன்றாவது முனையில் கடுமையான போட்டியைக் கொடுப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் அவரவர் தொகுதியில் செல்வாக்கைப் பெற்றவர்கள்.

நீலகிரியில் நிற்கும் எல்.முருகனும் கோயம்புத்தூரில் நிற்கும் அண்ணாமலையும் நட்சத்திர வேட்பாளர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு சாதகமல்லாத அம்சங்கள் அந் தத் தொகுதிகளில் உண்டு. நீலகிரி தொகுதியில் உள்ள மலையக மக்களின் வாக்குகளை எல். முருகனால் பெற முடியுமா என்பது சந்தேகம் தான். அதேபோல, கோயம் புத்தூரில் அ.தி.மு.க வுக்கும் தி.மு.வுக்கும் உள்ள கட்சிக் கட்டமைப் பைத் தாண்டி அடிமட்டத்தில் பா.ஜ.கவால் பணியாற்ற முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். தவிர, இந்தத் தேர்தலில் அ.தி.மு.க., தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி தவிர, நாம் தமிழரும் களத்தில் நிற்கிறது. இரு திராவிடக் கட்சிகளையும் பிடிக்காதவர்கள் நாம் தமிழருக்குப் வாக்களிப்பார்களா, பா.ஜ.கவுக்கு வாக்களிப்பார்களா என்பது முக்கியமான கேள்வியாக இருக்கும்" என்றார்.

**இம்மாதிரியான மும்முனைப் போட்டிக ளில் வெற்றிவாய்ப்பு யாருக்கு?**

"பொதுவாகத் தேர்தல் முடிவுகளை யாரும் கணிக்க முடியாது. இருந்தபோதும், பல முனைப் போட்டி இருக்கும்போது, அ.தி.மு.க., தி.மு.கவின் அடிப்படையான வாக்கு வங்கி அவர்களுக்குச் சென்றுவிடும். மீதமுள்ள வாக் குகளை மற்ற கட்சிகள் எல்லாம் பிரித்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், இதை யெல்லாம் தாண்டி கட்சிகளின் பிரச்சாரம், மக்களிடையே உள்ள அதிருப்தி ஆகியவையும் முடிவுகளை தீர்மானிக்கும் முக்கிய காரணி யாக இருக்கும்" என்கிறார் ஷ்யாம்.



## தேசிய லோக் அதாலத் மூலம் 62,559 நிலுவை வழக்குகளுக்கு தீர்வு!

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியும், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவருமான எஸ்.வி.கங்காபுர்வாலா மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல் தலைவரான நீதிபதி ஆர்.மகாதேவன், உயர் நீதிமன்ற சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவரான நீதிபதி எஸ்.எஸ்.சுந்தர் ஆகியோ ரது அறிவுறுத்தலின்படி இந்தாண்டின் முதல் லோக்—அதாலத் தமிழகம் முழுவதும் நடந்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி கள் ஜெ.சத்யநாராயண பிரசாத், பி.பி.பாலாஜி, ஆர்.கலைமதி, கே.ராஜசேகர், என்.செந்தில் குமார், ஜி.அருள்முருகன் மற்றும்ஓய்வு பெற்ற நீதிபதிகள் பி.கோகுல்தாஸ், எம்.ஜெயபால் ஆகியோர் தலைமையில் 8 அமர்வுகளும், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதிகள் எஸ்.?மதி, கே.கே.ராமகிருஷ்ணன் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதி ஜி.சொக்கலிங்கம் ஆகியோர் தலைமையில் 3 அமர்வுகளும், சென்னை கடன் வசூல் மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி டி.என்.வள்ளிநாயகம் தலைமையில் ஒரு அமர்வும் ஏற்படுத்தப்பட்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

இதேபோல மாநிலம் முழுவதும்உள்ள கீழமை நீதிமன்றங்களில் மொத்தம் 482 அமர்வுகள் ஏற்படுத்தப்பட்டு நிலுவை வழக்குகள் விசாரிக்கப்பட்டன. இதில் தமிழகம் முழுவதும் மொத்தம் 62 ஆயிரத்து 559 நிலுவை வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு, அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 505கோடியே 78 லட்சத்து 18 ஆயிரத்து659 இழப்பீடாக வழங்க உத்தரவிடப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற லோக்—அதாலத்தை தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம், ஆர்.எம்.டி.டீக்காராமன், என்.சதீஷ்குமார், பி.டி.ஆதிகேசவலு, சி.சரவணன் ஆகியோர் பார்வையிட்டு பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகைக்கான உத்தரவை வழங்கினர்.

இந்த லோக்—அதாலத்தில் வழக்கறிஞர் கள், பல்வேறு துறை சார்ந்தஅரசு அதிகாரிகள், காப்பீட்டு நிறுவன அதிகாரிகள் பங்கேற்றனர்.

லோக்—அதாலத்துக்கான ஏற்பாடுகளை மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலரும் மாவட்ட நீதிபதியுமான ஏ.நசீர் அகமது, உயர் நீதிமன்றசட்டப்பணிகள் ஆணைக்குழு செயலர் மற்றும் மாவட்ட நீதிபதியுமான கே.சுதா உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

Published and Printed by Karthikeyan P and Printed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai-600 002 and Published at 13/25, 2nd Street, Sundharapuram, Puliyanthope, Chennai-600 012. Cell : 94444 01485 Editor: SRIDHAR